தந்துதவியவர்: தேசம்நெற்

அன்பளிப்பு **U.K. 40p** Germany: 2.00DM, France: 5FF, Swiss: 2SF, Canada: 1.25Ca$

The Eela Bhoomi

# ஈழபூமி

The Weekly Tamil Newspaper in Europe

வருடம் 1 வாரம் 6 04 - 04 - 1992 --- 12 - 01 - 1992

விகாரை மீண்டும் புனரமைக்கப்பட வேண்டும்.
வடகிழக்கு மாகாணங்களில் சிங்களவர்கள்
குடியமர்த்தப்படல் வேண்டும்
என்று கூச்சல் போடுகின்றனர்.
ஆடறுக்க முன்....... காயத்திரி கொன்ஸ்ரன்ரைன்
எழுதும் எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்
உள்ளே.....

# வடக்கு, கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர இந்து சங்க ஒன்றியத்தின் ஆறம்சத்திட்டம்

எம்.எஸ்.சலீம்

வடக்கு கிழக்கு மாகாணங்களின் பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவர ஆறு அம்சத் திட்டம் ஒன்றை பாராளுமன்றக் குழுவிடம் கையளித்திருக்கின்றன மூன்று இந்துச் சங்கங்களின் ஒன்றியம்.

திரு யோகேந்திரா துரைச்சாமி என்பவரால் கைச்சாத்திடப்பட்ட இந்த மகஜர் இன்று பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி கைச்சாத்திடப்பட்டுள்ள இந்த ஆறம்சத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு கோரிக்கைகள் வருமாறு.

வடக்குக் கிழக்கில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அரசு புலிகள் யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கு வர வேண்டும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தமான, 1987 ஆண்டு கைசாத்திட்ட உடன்படிக்கையை உடனடியாக அரசு அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

யுத்த நிறுத்தத்தை இலங்கை அல்லாத நேச நாடு ஒன்று மேற்பார்வை செய்யவேண்டும்.

வடக்கு கிழக்கு நிர்வாகத்தை நிர்வகிப்பதற்கு ஒரு இடைக்கால சபை ஒன்று

(9ம் பக்கம் பார்க்க)

## மலேசியாவில் புலிகள்

(விசுவன்)

அண்மையில் இந்தியக் கடலில் விடுதலைப் புலிகளின் படகு ஒன்று ஆயுதங்களுடன் கைப்பற்றப்பட்டதை அடுத்து விடுதலைப் புலிகளுக்கு சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களிடமிருந்து போர்க் கருவிகளை வாங்கி இலங்கைக்கு கடத்த உதவி கிடைத்துள்ளதாக ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இவ்விரு நாடுகளில் முக்கியமாக பெரும்பாலான ஆயுதங்கள் சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளில் கொள்வனவு செய்யப் பட்டுள்ளதாகவும், இதற்கான நிதி உதவியில் குறிப்பிட்ட தொகை மலேசியா வாழ் தமிழர்களிடமிருந்தே பெறப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. இது பற்றி மலேசியப் பொலிஸார் கருத்து தெரிவிக்கையில் இதற்கான ஆதாரங்கள் தமக்கு கிடைத்துள்ளதாகவும் இந்தியாவில் நடைபெற்ற சில பயங்கரவாத சம்பவங்களுக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு என்பதை நிரூபிக்கும் வகையில் பல ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

## பிரேமாவுக்கு எதிராக லலித்தின் புதிய கட்சி

(நமது நிருபர்)

ஸ்ரீ லங்கா ஜனாதிபதி, தமிழின ஒழிப்பு சூத்திரதாரி பிரேமதாஸவின் தன்னதிகாரம் கொண்ட அரசை எதிர்த்துப் போராட புதிய கட்சியொன்றை உருவாக்கியுள்ளனர் ஐக்கியதேசியக் கட்சியை விட்டு வெளியேறி அரசுக்கெதிராக பிரச்சாரம் செய்யும் லலித் குழுவினர். தமிழ் மக்களின் அழிவுக்கு காரணமாய் இருந்த அன்றைய தேசிய பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் லலித் அத்துலத்முதலி, தன்னதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காக புதிய கட்சி ஒன்றை அமைத்



தயாராகும் லலித்

துள்ளார். ஜனநாயக கூட்டுத் தேசிய முன்னணி என்று அழைக்கப்படும் இக் கட்சி தொடர்பாக கருத்து வெளியிட்ட லலித், இந்தப் புதிய கட்சி ஜனநாயகத்தை பாதுகாக்க தன்னாலான முயற்சியைச் செய்யும் என்று கூறினார்.

(ஆனந்த சங்கர்)

ஸ்ரீலங்கா இராணுவப் படையினரைச் சேர்ந்த மூன்று இராணுவத்தினர் அண்மையில் கொலைசெய்யப்பட்டுள்ளனர். மூதூரில் உள்ள உப்புரல் என்ற இடத்தில் நடந்த சம்பவத்தின் போது கொல்லப்பட்ட இந்த இராணுவத்தினர் பற்றிக் கிடைக்கும் செய்திகள் தெரிவிப்பதாவது, இராணுவத்தினர் இந்தப் பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனராம். இம்மாதிரி ரோந்து போய் கொண்டிருந்த சமயமே இவர்கள் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானார்கள் என்றும் இந்தத் தாக்குதலின் போது மேலும் மூன்று இராணுவத்தினர் காயமுற்றனர் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

## மட்டுநகர் சுற்றி வளைப்பு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் பொலீசாரினதும் இராணுவத்தினதும் திடீர் சுற்றிவளைப்புக்கு உள்ளாகியுள்ளது. இரு தினங்களுக்கு முன் சுமார் ஆறு மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இந்த சுற்றி வளைப்பின் போது நூற்றுக்கும் அதிகமான மக்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதுவித முன்னறிவித்தலுமின்றி மேற்கொள்ளப்பட்ட இந்த சுற்றிவளைப்பின் போது ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பொலிசாரும் இராணுவத்தினரும் பங்கு கொண்டதாக அறிவிக்கப்படுகிறது. பன்னிரண்டு வயதிற்கும் நாற்பத்திரண்டு வயதிற்கும் இடைப்பட்ட அனைவரையும் மட்டக்களப்பு சிவகுரு மைதானத்துக்கு அழைத்து விட்டு வீடுவீடாக சோதனை நடாத்தப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(9ம் பக்கம் பார்க்க)

## நெளுக்குளத்தில் அகதி முகாம்

(நமது நிருபர்)

அண்மையில் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் நடந்த தாக்குதலின் போது புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட இடங்களில் ..... ஒன்றான நெளுக்குளம் பகுதியில் அகதி முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நெளுக்குளம் மகாவித்தியாலயத்தில் அமைந்திருக்கும் இந்த முகாமில் சுமார் 305 அகதிகள் வரை உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த முகாம் வவுனியா அரசாங்க அதிபரின் கண்காணிப்பில் இருப்பதாக இந்தச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## தொண்டாவின் திட்டத்தில் ஒன்றுமில்லை - திலகர் அறிவிப்பு

(நமது நிருபர்)

தொண்டமானின் புதிய தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காணும் பொருட்டு உருவாக்கப்பட்ட திட்டத்தை தென்னிலங்கை அரசியல் வாதிகளும், மத குருமார்களும் பெரிதாகப் பேசி வருவது யாவரும் அறிந்ததே. இது பற்றிக் கருத்து வெளியிட்ட புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு திலகர் , தொண்டமானின் தீர்வு யோசனையில் குறிப்பிடும் அளவிற்கு ஏதும் பெரிதாக இல்லை என்றும், இந்த திட்டம் மாகாண ஆட்சி பிரதியே கூறுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். வழமை போலவே தமிழ் மக்களின் உரிமைகளை முற்றாக அங்கீகரிக்க மறுக்கும் அரசின் இன்னொரு வடிவம் தான் இந்த புதிய திட்டம் என்று கூறும் இவர் இது பற்றி மக்கள் கவனமாக இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

உள்ளே.........

அகிம்சையிலிருந்து...
புதியதோர் உலகம்
பத்திரிகையின்........
ஆபாசங்களின் .....
நன்றி கோர்பச்சோவ்....
மக்களின் நலன்களை....
இன்னும் பல சுவையான அம்சங்கள்

## ரஷ்யாவில் பொருட்கள் விலையதிகரிப்பு, மக்கள் பதட்ட நிலையில்

அண்மையில் நடந்த அரசியல் மாற்றங்களைத் தொடர்ந்து ரஷ்ய, யுக்கிரேன் குடியரசுகளில் உணவுத் தட்டுப்பாடு.

ரஷ்யாவிலும், யூக்கிரேனிலும் புதுவருட தினத்துடன் திறந்த பொருளாதாரச் சந்தை அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து அத்தியாவசியப் பொருள் முதல் ஆடம்பரப் பொருள்வரை விலைகள் மும்மடங்காக அதிகரித்துள்ளது. திறந்த பொருளாதார முறை நடைமுறைக்கு கொண்டு வந்ததன் முதல் கட்டமாக இவ்வளவு காலமும் நடைமுறையிலிருந்த விலைக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்தே அருமையாகக் கிடைக்கும் பொருட்கள் அனைத்தினதும் விலைகள் இப்படி விஷம் போல் ஏறியுள்ளன. 70 ஆண்டுகளாக கம்யூனிச ஆட்சியில் நடைமுறையில் இருந்த பொருளாதாரக் கொள்கைகள் அனைத்தும் இப்படி திடுதிப்பென கைவிடப்பட்டதே இப் பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என பழைய ஆட்சியாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இச் சடுதி மாற்றத்தினால் நாட்டின் சய உற்பத்தி பெருமளவில் குறைந்துள்ளதையும் இவர்கள் சுட்டிக் காட்ட தவறவில்லை.


## ஜேர்மனி வாசகர்களுக்கு ஒரு நற்செய்தி

இவ்வாரம் முதல் ஈழபூமி வாரப்பத்திரிகை ஜேர்மனியிலும் விற்பனையாகிறது. இதில் உங்கள் ஆக்கங்களும் இடம்பெற வேண்டுமாயின் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி,

**T.Buvanendran**
**Post-Fach 5113**
**5840 Schwerte**
**West Germany**
**Tel 2304 74391**

திருமண அழைப்பிதழ், பிறந்த நாள் வாழ்த்து, நன்றி நவிலல், மற்றும் விளம்பரங்களை ஈழபூமியில் பிரசுரிக்க மேற்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

## சுவிஸ் வாசகர்களுக்கு ஒரு நற்செய்தி !

இப்பொழுது சுவிசிலும் விற்பனையாகிறது ஈழபூமி. லண்டனில் அதிகளவில் விற்பனையாகும் இப்பத்திரிகையில் உங்கள் ஆக்கங்களும் இடம்பெற வேண்டுமாயின் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**Asian Enterprise**
**HOHL Str 78**
**8004 Zurich.**

திருமண அழைப்பிதழ், பிறந்த நாள் வாழ்த்து, நன்றி நவிலல், மற்றும் விளம்பரங்களை ஈழபூமியில் பிரசுரிக்க மேற்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

# A.P.S Late Shop
## 112 Haydons Road London sw19

லண்டன் வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு இனிய செய்தி!
உங்கள் அன்றாட தேவைகள் அனைத்தையும் மலிந்த விலையில்
குறைந்த செலவில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

# A.P.S

* உடனுக்குடன் தருவிக்கப்படும் மரக்கறி, பழவகைகள்!
* பலசரக்கு மற்றும் குளிரூட்டப்பட்ட உணவுப்பொருட்கள்
* நவநாகரீக டிசைன்களில் செய்யப்பட்ட தங்க நகைகள்

எதுவானாலும் இலண்டனில் குறைந்த விலையில் நிறைந்த தரத்தில் விற்பனை செய்யும் ஒரே ஸ்தாபனம்

# *A.P.S*

இத்துடன் எம்மிடம் கிந்தி, தமிழ் மலையாளம் போன்ற மொழிகளில் வீடியோ, ஒடியோ கசட்டுக்கள், **Compact disks** யாவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு என்பதை எமது வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**Fax** சேவையும் எம்மிடம்கிடைக்கும்

**ASA Electronics** & Marketting

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்.

சலோ
SALO
Textiles, Jewellery & Asian fancygoods
Importers & Dealers
Seilerstr 8, City west. 3011 Bern.
Phone: 031/25 50 20 Fax: 031/25 74 64

லண்டனில் தமக்கென ஒரு இடத்தைப் பிடித்திருக்கும்

# ASA

மின்சார மற்றும் தன்னியங்கி உபகரணங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்து வருகிறார்கள் என்பதை
வாடிக்கையாளர்களுக்கு அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

RICE COOKERS TELEPHONES STATIONARY
FAX MACHINES VIDEO RECORDERS ORIENTAL CLOTHES

FOODS STUFF AND ALL OTHER ELECTRICAL & ELECTRONICS EQUIPMENTS

ARE SOLD AT THE LOWEST PRICE IN TOWN


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

The Eela Bhoomi

# ஈழபூமி

The Weekly Tamil Newspaper in Europe

ஈழபூமியின் மடியில் இருந்து

வருடம் 1 வாரம் 6 04-01-1992 சனிக்கிழமை

## அங்கிருப்பவர்களையும் சிந்திப்போமா?

தமிழீழப் போராட்டம் பல்லாயிரக்கணக் கான அகதிகளைப் படைத்து நிற்கும் ஒரு போராட்டம். ஆக்கிரமிப்பு படைகளின் அட்டு ழியங்களின் நிமித்தமும், சக இயக்கங்களின் கெடுபிடிகளின் நிமித்தமும் அகதிகளாக் கப்பட்டிருக்கும் எம்மக்கள் இன்று படுகின்ற துன்பங்கள் சொல்லிலடங்காதவை.

இவர்களில் நாம் கவனம் செலுத்தப்பட வேண்டியவர்கள் ஈழத்தில் அல்லலுறும் மக்களேயாகும். அன்றாட உணவுக்கு வழி யின்றி தங்கியிருக்கும் முகாம்களில் பாதுகாப் பின்றி சதா நோயிலும் பிணியிலும் வதைபட்டுச் சாகும் எங்கள் தேசத்து மக்களை மறந்துவிட்டு நாம் மேலைத்தேயங் களில் வாழ்கின்ற விதம் அருவருப்பை மன தில் தோற்றுவக்கிறது.

ஒரு ஸ்ரேலிங் பவுண் அங்கே முகாமிலி ருக்கின்ற ஒருவருக்கு ஒரு நாள் சாப்பாட் டுக்குப் போதுமானதாகும். ஆனால், இங்கே நாம் தேவையில்லாமல் எத்தனையோ பவுண் களை நாளும் விரையம் செய்கிறோம். ஈழத்திலே ஒரு குழந்தை பால்மாவுக்கு அம்மா அம்மா என்று அழுகின்ற போது இங்கே ஒரு குழந்தையின் பிறந்த நாளுக்கு ஆயிரம் பவுண்கள் செலவு செய்து பிறந்தநாள் கொண்டாடும் எம்மவர்கள் பிறந்து வளர்ந்த பூமியை மறந்து விட்டார்கள் போலும். டிஸ்கோ விருந்தும். களியாட்டங்களும் என்று சதா பணவிரையம் செய்யும் எவரிடமாவது ஒரு பவுண் அகதிகள் நிதிக்காக நன் கொடை கேட்டால் அவர்கள் அளிக்கும் பதில் மோட்கேஜ் கட்ட பணம் இல்லை நன்கொடை என்ன வேண்டிக் கிடக்கிறது என்று.

இங்கு எத்தனையோ பொதுநல ஸ்தாப னங்கள் அகதிகளின் புனர்வாழ்வுக்காக அமை க்கப்பட்டிருக்கின்றன. அந்த ஸ்தாபனங்கள் ஊடாக எம்மால் முடிந்ததைக் கொடுத்து அங்கே பசியில் வாடி வியாதியில் கொடுமை ப்பட்டு அரவணைக்க யாருமற்ற நிலையில் இருக்கும் எங்கள் தேசத்தின் உடன் பிறப்புக் களை காப்பாற்ற ஏதேனும் செய்யக் கூடாதா?

நாங்கள் ஒரு தேசத்துக்கு சொந்தமா னவர்கள். அந்த தேசத்தில் இருப்பவர்களுக்கு உதவி புரிய வேண்டிய கடமை எங்களுக்கு உண்டு. ஆகவே, இங்கு நாம் கூத்தாடும் போது அங்கு ஆடை யின்றி, உணவின்றி அணைக்க அம்மாவின்றி அனாதையாய் நிற் கும் அந்தசிறுவர்களையும் சற்று சிந்திப்போமா?

நாங்கள் எந்த நேரத்திலும் ஒன்றை மறந்து விடக்கூடாது. அதாவது, நாம் எல்லோரும் பிச்சை கேட்டு இந்த நாட்டுக்கு வந்தவர்கள். இங்கே இருக்கின்ற வரையில் நாம் பிச்சைக் காரர்கள் தான். எமக்கு என்று ஒரு நாடு உண்டு. அது தமிழீழம் தான் என்பதை மனதில் கொண்டு எங்கள் மக்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய சேவையை எண்ண

## ஒரு பத்திரிகையின் அவசியம்

எஸ். இராசையா

பத்திரிகை என்பது ஒரு மனிதனின் அத்தியாயவசிய வெகுசனத் தொடர்பு சாதன ங்களில் ஒன்று. ஓர் இட த்தில் நிகழும் செய்திகளை இன்னோர் இடத்தில் இருக் கும் ஒருவர் இலகுவில் தெரிந்து கொள்ளவும் அத ற்கு ஏற்ப தன்னைத் தயார் செய்து கொள்ளவும் உதவி புரிவது பத்திரிகைத் துறை. ஒரு பத்திரிகை அது வெளி யிடப்படுகின்ற சூழலோடு ஒட்டியதாக அமைகின்ற அதே வேளை அந்த சூழ லில் ஏற்படுகின்ற மாற்றங்க ளுக்கு ஏற்ப தன்னையும் மாற்றிக் கொள்ளக்கூடிய தாக இருக்கவேண்டும்.

ஒரு சமுதாயத்தில் பத்திரி கை துறையானது அளப்பரிய சேவையை ஆற்றவேண்டும். அந்த சமூகத்திற்கு உரிய கலை கலாச்சாரத்தை பேணுவதற்கு பாடுபடும் அதே வேளை அந்த கலை, கலாச்சாரங்களில் இருக்கும் தளைகளையும் உடைத்தெறி வதில் தன் பங்கைச் செலு த்த வேண்டும்

தட்டிக் கொடுப்பதற்காக மட்டும் பத்திரிகை உருவா காது, தட்டிக்கேட்கவும் பத் திரிகைகள் பிறக்கவேண்டி யது அவசியம். துப்பாக்கி முனையிலுருந்து புறப்படும் குண்டுகளுக்கு அரசியலை மாற்றியமைக்கும் வல்லமை எவ்வளவு இருக்கின்றதோ அதே அளவுக்கு பேனாவில் இருந்து பிறக்கின்ற வார்த் தைகளுக்கும் வல்லமை இரு க்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட குழுவி னுடனோ அல்லது அரசியல் பிரிவினுடனோ சார்புடைய தாக ஒரு பத்திரிகை அமையு மானால் அது வெறும்கட்சிக் காக வெளிவரும் பத்திரி கையே தவிர சமுதாயத்தில் இருக்கும் மாசுகளை அகற்ற வெளிவரும் பத்திரிகையாக இருக்காது.

இந்த வகையிலே இன்று ஐரோப்பாவிலும் சரி, இலங் கையிலும் சரி வெளிவருகி ன்ற பத்திரிகைகள் சார்புத் தன்மை கொண்டனவாகவே இருக்கின்றன. ஒருவர் தன் னைப்பற்றிய பிரச்சார கூறி விட முடியாது. பத்திரி கைச் செய்திகளை ஜீரணிக்க முடியாது தவிக்கும் வாசகர் கள் சிலரையும் கவனத்தில் எடுக்கவேண்டும்.

ஒரு பத்திரிகை இப்படித் தான் இருக்கவேண்டும் என்ற விதிமுறை இருக்க வேண்டிய அவசியமில்லை. அது எப்படியும் இருக்கலாம். ஆனால் சொல்லப்படுகின்ற செய்திகள் வாசகனுக்கு தக வல் கொடுப்பதாக மட்டும் அல்லாது அவனை சிந்திக்க வைக்கக் கூடியதாகவும் இரு க்கவேண்டும். வேகமாகமாறி க்கொண்டிருக்கும் இந்த போது ஒரு பத்திரிகை வில கிச்செல்கிறதோ அன்றிலிரு ந்து அந்தப் பத்திரிகை வியா பாரத்திற்கு மட்டுமே சந்தை க்கு வருகின்றது என்று பொருள். ஈழ வரலாற்றில் எத்தனையோ பத்திரிகைகள் இயக்கங்களால் தடுத்து நிறுத் தப்பட்டிருக்கின்றன, தகர்த் தெறியப்பட்டுள்ளன. பத்தி ரிகை என்பது மக்களுக்கு உண்மையை கூறிவிடும் என்ற பயத்தைத் தவிர வேறு என்ன காரணம் இதன் பின்னணியில் இரு க்க முடியும்?

ஒருவரைத் தாக்குவது மட்டும் ஒரு பத்திரிகையின் குறிக்கோளாக இருக்கக் கூடாது. அவர் அந்த சமூகத் தில் செய்கின்ற நல்ல காரிய ங்களை வரவேற்று ஆதரவ ளிக்கவும் வேண்டும். சார்பு அற்று நடு நிலமையாக நின்று அந்த சமூகத்தின் யதார்த்த சூழ்நிலையோடு

**"பாராட்டுவது மட்டும் ஒரு பத்திரிகையின் கடமை அல்ல, சமுதாயத்திற்கு வேண்டிய நல்ல கருத்துக்களை பகிரங்கப்படுத்துவதும் ஒரு பத்திரிகையின் கடமையாக இருக்க வேண்டும்"**

மேடையாக பாவிக்கப் பத்தி ரிகையைப் பாவிப்பது பத்தி ரிகையின் புனிதத்தையே அசிங்கப்படுத்துவதாக அமை ந்து விடும். வரவேற்க வேண்டிய விடயங்களை தட்டிக் கேட்கும் சில பத்திரி கைகள், சுட்டிக்காட்ட வேண்டிய விடயங்களில் மௌனம் செலுத்திவிடுகின் றன.

இதற்கு பத்திரிகையாளர் களை மட்டும் நாம் குறை நவீன உலகிலே சில பத்திரி கைகள் 15ஆம் நூற்றாண் டையே தூக்கிப் பிடித்துக் கொண்டிருப்பது வியப் பையே கொடுக்கின்றது.

ஒரு செய்தி உண்மை என்று ஊர்ஜிதப்படுத்தப் படும் பட்சத்தில் அந்த செய்தியை எந்த வித ஒளிவு மறைவுமின்றி வாசகர்களுக் குக் கொடுக்கவேண்டியது ஒரு பத்திரிகையின் கடமை. அந்தக் கடமையிலிருந்து எப் கலந்து செயலாற்றுவதே ஒரு பத்திரிகையின் முக்கிய குறிக் கோளாக இருக்கவேண்டும்.

பத்திரிகை தட்டிக்கொடுக் கும் தாயாக இருக்கும் அதே நேரம் தட்டிக் கேட்கும் தந் தையாகவும் இருக்க வேண் டும். அப்போது தான் அந்த பத்திரிகை என்னும் குழந்தை ஊட்டமுள்ள பிள்ளையாக வளரமுடியும்.

## நன்றி சோவியத் யூனியன்

1985 இல் பதவியேற்ற கோர்பச்சோவிற்கு சோவிய த்தில் முன்னைய கம்யூனி ஸ்ட் கட்சித் தலைவர்கள் எவருக்கும் கிடைக்காத புதிய முடிவு இவருக்கு கிடைத்துள்ளது. ஆம், முன் னைய தலைவர்களான லெனின், ஸ்ராலின், பிரஸ் னேவ், அந்திரப்போவ், செர்னாங்கோ போன்றோர் க்கு அவர்களின் இறப்பே பதவிக்காலத்தை முடித்து வைத்தது. விதிவிலக்காக குருஷேவ் மட்டும் ஒரு சதிப் புரட்சியினால் ஆட்சியிலி ருந்து கவிழ்க்கப்பட்டார். ஆனால் இவரும் தனது ஆட்சிக்காலத்தின் பின் பய ணக்கைதிபோல் அடைபட் டுக் கிடக்கவேண்டி இருந் தது. ஆனால் கோர்பச்சேவ் இன் விடயமோ வேறு. அவர் மிகவும் நாகரீகமான முறையில் பதிவியை விட்டு விலக்கியுள்ள அதே சமயம், புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொதுநலக் குடியரசினால் எந்த விதமான அச்சுறுத் தலும் இல்லை. அப்படியா யின் கோர்பச்சேவின் எதிர் காலம் என்ன? அவர் அண் மையில் அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்றிற்கு பேட்டி அளிக்கையில் அமெரிக்க, பிரான்ஸ், ஜேர்மனி, ஜப் பான் பல்கலைக்கழகங்களி லிருந்து விரிவுரையாளராக பணியாற்ற தனக்கு அழை ப்பு வந்துள்ளது என்றும் அவற்றை ஏற்பது பற்றி தான் இன்னும் முடிவு செய் யவில்லை என்றும் கூறியுள் ளார்.

புதிதாக உருவாகியிருக் கும் பொதுநலவாயக் கூட்ட ரசு கோர்பச்சேவுக்கு அவர் ஜனாதிபதியாக இருந்தபோது

ளும் நகர் புறத்திலும், நாட்டு ப்புறத்திலுமாக இரண்டு வீடுகள் வழங்கப்பட உள் ளது. ஆனால், அவர் கேட்டு க்கொண்டதிலும் பார்க்க குறைவாக இருபது பேர் மட் டுமே அவரது மெய்ப்பாது காவலர்களாக் நியமிக்கப்பட் டுள்ளனர். கோர்பிக்கு தீவிர கம்யூனிஸ்டுக்களிடம் இருந் தும் வேறு சில பயங்கரவாத அமைப்புக்களிடம் இருந்தும் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்ற ஒரே நோக்கத்துக்கா கவே இப்பாதுகாப்பு வழங்க ப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க இவர் மீண்டும் அரசியலில் புகுவாரா என்பது இன்னு மொரு கேள்வி. இவர் அமெரிக்க நிறுவனம் ஒன்றி ற்கு அளித்த பேட்டியின் போது இன்னுமொரு இடத் தில் குறிப்பிடுகையில், தான்

கொடுத்துள்ளது. ஆனால், அப்பணம் முழுவதும் பல நிவாரண உதவி ஸ்தாபன ங்களுக்கே சென்றடையுள்



புதிய வாழ்வைத் தொடங்கும் கோர்பச்சோவ்

ளது. பிரபல அமெரிக்க பத் திரிகை நிறுவனம் ஒன்று

பனம், எதிர்கால அரசியல் வாதிகளுக்கும் பல்வேறு நாட்டுத் தலைவர் களுக்கும் அரசியல் தொடர்பாக முன்

யோசனைகளை வழங்கும். இத்தாபனத்தில் இங்கிலா ந்தின் முன்னாள் பிரதமர் மார்க்கிரட் தச்சர் இணைந்தி ருப்பது குறிப்பிடத் தக்கது. ஆனால் தலைவராகப் பொறுப்பேற்கும் இந்த நிறு வனம் எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்பதில் சந்தேகம் தெரிவித்துள்ளனர். காரணம், கடந்த ஆறரை வருட கால ஆட்சியில் பல விடயங்களை முக்கியமாக கடந்த ஆவணியில் நடந்த சதிப்புரட்சியை முன்கண்டறி யத் தவறியமே.

எப்படியோ முன்னய சோவியத் தலைவர்கள் போ லல்லாது கோர்ப்ச்சேவுக்கு புதியதொரு எதிர்காலம்

## விடை பெறும் கோர்பி

-வாசு.

அரசியலை விட்டு விலகப் போவதில்லை என்றும், "நான் இந்நாட்டிலேயே பிறந்தேன். வளர்ந்தேன், இந்த நாட்டை விட்டு ஒருபோதும் வெளியேறமாட் டேன்" என்றும் கூறியுள் ளார்.

எது எப்படி இருப்பினும் பதவியிலிருந்து விலகும் இவருக்கு பணம் ஒரு பிரச் சனையாக இருக்க மாட்

கருத்துத் தெரிவிக்கையில் இவர் தனது கடந்தகால வரலாற்றை எழுதினாலே போதும் மில்லியன் கணக் கில் அது பணத்தை குவித்து விடும் என்று குறிப்பிட்டுள் ளது.

அண்மையில் சுவாஸ் டியா என்ற ரஸ்யப் பத்தி ரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றின் போது தான் கோர்பச்சேவ் நிதியம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இனப் பிரச்சனை தீர்வு! தொண்டாவின் திட்டம்

தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்குத் தீர்வுகாணும் பொருட்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு தொண்டமான் தயாரித்துள்ள திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கான தீர்வுகள் பற்றி சிங்கள மதகுருமார்களிடமும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற லலித் குழுவினரிடமும் அதிருப்தி நிலவுகிறது.

தொண்டமான் ஒரு தமிழன். இவர் கொண்டுவருகிற தீர்வு பிரபாகரனின் தமிழீழம் என்ற லட்சியத்துக்கு வழிகோலும் வகையிலேயே அமைந்துள்ளது என்று கூறும் மதம் கொண்ட மத குருமார்கள் ஒருபுறம், ஜனாதிபதியினால் தான் இந்த தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளது, தொண்டமானுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை, என்று கூறும் லலித் குழுவினர் ஒரு புறம், தைப் பொங்கல் கழித்து யாழ்ப்பாணம் செல்கிறேன், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தப் போகிறேன். என்று கூறும் தொண்டமான் மறுபுறம் என நடக்கும் ஒரு கேலி நாடகத்தை சிரிக்க முடியாமல் ரசிக்கிறார்கள் அப்பாவி வடக்கு கிழக்கு மக்கள்.

இத்தனை எதிர்ப்புக்களின் மத்தியில் இந்த தீர்வு நிலை நாட்டப்படுமா என்பது ஒரு புறமிருக்க, தொண்டமான் அண்மையில் விடுத்துள்ள அறிக்கையின் படி, அதாவது அண்மையில் வெளியிடப்பட்ட தீர்வு குறித்த யோசனைகளுக்கும் அரசுக்கும் எந்த வித தொடர்பும் கிடையாது, இது நான் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் முன் வைத்த தீர்வேயேகும் என்று கூறியிருப்பது முட்டையில் மயிர் பிடுங்கும் நிலைக்கே கொண்டு வந்து விட்டுள்ளது.

இவ்வாறு இரண்டு பக்கமும் ஸ்திரமில்லாமல், எதை எதையெல்லாமோ பேசிக்கொண்டு, இடையிடையே பேச்சுவார்த்தை பற்றியும் பேசிக் கொள்ளும் இவர்கள் பேச்சுவார்த்தையை ஒரு வித நாகரீகமாக மாற்றியுள்ளார்கள். இந்தப் பேச்சுவார்த்தை என்ற பின்னணியில் என்ன இருக்கிறது என்பதை நோக்குவதற்கு நாம் தொண்டமான் வைத்த தீர்வு என்ன சொல்கிறது என்பதை பார்க்க வேண்டும்.

1) வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த மாநிலம் என்ற கோரிக்கையை அங்கீகரித்தல்.

2) இந்த மாநிலத்தை மாநிலம் என்றோ, மாகாணம் என்றோ அழைத்துக் கொள்ளலாம்.

3) இந்த மாநிலத்துகுரிய ஆணையாளர் இந்த மாநிலத்தின் முதலைமைச்சரும் நாட்டின் ஜனாதிபதியும் இணைந்தே நியமிப்பார்கள்.

4) 15000 பொலிஸ் படையினர் இந்த மாநிலத்துக்கு வழங்கப்படுவர்.

5) முஸ்லிம் மக்கள் இந்த மாநிலத்துக்குள், பிரதேச சபை என்று ஒன்றை அமைத்துக் கொள்ளலாம். அந்த சபை பின்னர் தமது தேவைகளை மாநில அரசிடம் முன்வைக்கும்.

*மேற்சொன்ன ஐந்து விட*யங்களே முக்கியமானவை. இதனுடன் சேர்த்து மற்றைய துறைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தை விட ஒரளவுக்கு தமிழ்பேசும் மக்களின்உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் இந்த தீர்வு கூட வடக்கு கிழக்கு மக்களின் உண்மையான சுயநிர்ணய உரிமையைக் கொடுக்கும் தீர்வாகக் கருதப்படவில்லை.

மாறன்


KUMARANS

குமரன்ஸ்

தமிழ்க் கடை

142, Hoe Street, Walthamstow,
London E17 4QR
Tel: 081-521 4955 & 081-520 5960
Fax: 081-521 9482

Tube: Walthamstow Central

Open Seven days a week (9a.m. - 10p.m.)

Sri Lankan Off Licence



# ஆபாசங்களின் மடியில்...

இற்றைக்கு இருபது முற்பது வருடங்களுக்கு முன்னர் வெளி வந்த படங்களுக்கும் இன்று வெளிவரும் படங்களுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. காலத்திற்கேற்ப வித்தியாசங்கள் இருக்கவேண்டும் என்பது ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான் என்றாலும், ஒரு சமுதாயத்தையே சீரழிக்கும் மாற்றங்களை எப்படி ஆதரிப்பது என்ற கேள்வி எழவே செய்கின்றது.

தர்மங்களைப் போதிப்பதும் அதர்மங்களை எதிர்த்துப் போராடுவதும் போன்ற பாங்கிலே வெளிவந்த அன்றைய படங்கள் குடும்பத்தோடு சென்று பார்க்கக் கூடியதாக இருந்தது. ஆனால் இன்று, பெரும்பாலானவை பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்களே பார்க்கலாம் என்ற அளவிற்கு வந்திருக்கிறது இந்தியச் சினிமா.

அன்றைய படங்களில் வருகின்ற பாடல்கள் கலையோடு தொடர்புடையனவாக இருந்தன. இன்றைய படங்களோ கலையை ஒட்டு மொத்தமாக விற்றுவிடுவன போன்று தென்படுகின்றன. காட்சிக்கு ஏற்ற மாதிரி பாடல்கள் எழுதிய காலம் மலையேறி பாடல்களுக்காக காட்சி அமைக்கின்ற நிலமைகளைக் காண்கிறோம். எப்படி ஒரு குடும்பப் பாங்கான படமாக இருந்தாலும் அதிலே ஒரு சிலுக்கின் நடனமோ அல்லது டிஸ்கோ சாந்தியின் நடனமோ பொருத்தப்பட்டிருக்கும். கதைக்கும் பாட்டுக்கும் எவ்வித தொடர்புமில்லாமல் அமையும் இப்பாடல் காட்சிகள் அரைகுறை ஆடைகளுடன் வந்து பார்வையாளர்களை திருப்திப்படுத்தவே புகுத்தப்படுகின்றன.

இந்தியா உலகிலேயே வருடத்திற்கு கூடுதலான படங்களை உற்பத்தி செய்யும் ஒரு நாடு. பிரதானமாக நான்கு மொழிகளிலேயே பெருவாரியான படங்கள் வெளியாகியுள்ளன. தமிழ், தெலுங்கு,



மலையாளம், ஹிந்தி ஆகிய இந்த மொழிகளிலும் வெளிவரும் படங்கள் ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு பிரதி பண்ணப்படுவது இயல்பானது ஆகையினால் ஒரு மொழிப் படத்தில் வருகின்ற ஆபாசக் காட்சிகள் இன்னொரு மொழிப் படத்துக்கு கடத்தப்படுகின்றது என்கிறார் ஹிந்திப் பட இயக்குனர் ஒருவர்.

காதல் காட்சிகள், நடனங்கள், முதலிரவுக் காட்சிகள் என்று படத்தின் கதைக்கு ஒவ்வாத முறையில் புகுத்தப்பட்டிருக்கும் கட்டங்கள் யாவும் ஆபாசங்களின் உச்சியைத் தொட்டுவிட்டன.

ஒருவரோடு ஒருவர் கை கோர்த்து நடிப்பதற்கே தணிக்கை அங்கீகாரம் பெறவேண்டிய சூழ்நிலையில் இருந்த இந்திய சினிமா இதயத்தை திருடாதே போன்ற படங்களின் மூலம் இதழோடு இதழ் இணைத்து முத்தமிடும் காட்சிகள் வரை போயிருப்பது இந்திய சினிமா வளர்ச்சியைக் குறிக்கின்றதா இல்லை இந்தியப் பண்பாட்டை சீர்குலைக்கிறதா என்று புரிய முடியாத அளவுக்குப் போயிருக்கிறது.

எது எது எல்லாம் மறைவாக இருக்க வேண்டும் என்று இந்தியப் பாரம்பரியம் எதிர்பார்க்கிறதோ அவையெல்லாம் இன்று திரையிலே காண்பிக்கப்படுகிறது என்கிறார் தளபதி திரைப்பட இயக்குனர் மணிரத்தினம்.

காட்சிகள் மாத்திரமின்றி கதை வசனம் கூட இரட்டை அர்த்தம் பொருந்திய வசனங்களாகவே இன்று காணப்படுகிறது. பொதுவாக பாக்கியராஜ் தயாரிக்கும் படங்கள் குடும்பப்பாங்கானவை என்றாலும் அவரது படங்களில் வரும் வசனங்களில் பெரும்பாலானவை இரட்டை அர்த்தம் பொதிந்தவை.

மார்பிலே ஒரு சிறிய துணியும் அரையிலே நிக்கருமாய்த் தோன்றும் ஒரு காட்சியிலே நடிக்கும் சிலுக் சுமிதா சொல்கிறார் ரசிகர்கள் நாம் இப்படி தோன்றுவதைத்தான் விரும்புகிறார்கள் என்று. ரசிகர்கள் இந்த மாதிரிப் படங்களை ரசிப்பதற்குக் காரணமே உங்களைப் போன்ற நடிக நடிகைகள் தானே என்பதை இவர் ஏன் புரிந்திருக்கவில்லை.

ரசிகர்கள் நிர்வாணமாகத் தோன்றினால் இன்னும் ரசிப்பார்கள் என்றால், அதற்காக நிர்வாணமாக நடித்துவிட முடியுமா என்ன? அரசியல் செல்வாக்கு, லஞ்சம், ஊழல் போன்றவற்றின் கைவரிசையினால் தணிக்கைக் குழுவை விலைக்கு வாங்கும் சில தயாரிப்பாளர்கள் வியாபாரத்தை நோக்காகக் கொண்டு இப்படிப்பட்ட காட்சிகளை வேண்டுமென்றே படமாக்குகிறார்கள், முன்னர் எப்போதும் இல்லாதவாறு

சண்முகம்.

அதிகரித்து வரும் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளுக்கு இந்திய சினிமாத்துறை கணிசமான பங்களிப்பை வழங்குகிறது என்பதை இந்திய புலனாய்வுப் பிரிவு கண்டறிய வேண்டும். இந்தியபாடசாலைச் சிறுவர்கள் பாடசாலைகளுக்கு போகாமல் களவாக பார்க்கும் படங்களில் 90 வீதமானவை சிறுவர்கள் அனுமதிக்கப்படக்கூடாத படங்களாகும். அழிந்துவரும் ஒரு சந்ததியினரைக் காக்கவேண்மென்றால் இன்றே தணிக்கைக் குழு இது பற்றிய இறுக்கமான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் அவசியமாகும்.



## செய்திச் சுருக்கம்..

7ம் பக்க தொடர்ச்சி

பெற்ற மோதல் ஒன்றின் போது இரு பகுதியினருக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இரண்டு அணியினராகப் பிரிந்து இதனை அண்டிய பகுதிகளை தமது கைவசம் கொண்டுவர முயற்சி செய்த இராணுவத்தின் மீது சுமார் 60 விடுதலைப்புலிகள் இணைந்து தாக்குதலை மேற் கொண்டார்கள். இந்த மோதலின் போது 11 புலிகளும் 17 இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர். இராணுவ தரப்பில் 4 பேர் காயப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். புலிகள் தரப்பில் இருந்து கிடைத்த தகவல்களின் படி 25 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் முப்பதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புலிகள் தரப்பில் பத்துப்பேர் மாத்திரமே கொல்லப்பட்டுள்ளதகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

25.12.91

வவுனியா

வவுனியா வடக்கு

இந்தப் பகுதிகளில் அமுலில் இருந்த ஊரடங்கு உத்தரவு இன்று முதல் தளர்த்தப்பட்டுள்ளது. பலத்த இராணுவத்தாக்குதலுக்குப் பின் தளர்த்தபட்டுள்ள இந்த ஊரடங்கு உத்தரவு அந்தப் பகுதி மக்களுக்கு பெரும் ஆறுதலை அளித்துள்ளது. இந்த ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்த சமயம் அரச படைகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் நிமித்தம் வவுனியா வடக்குபகுதிகளில் சில இடங்களை இராணுவம் தனது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது.

To place Your AD's Call

இந்திய சினிமா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# என் மண்ணைத் என் மண்ணைப்பற்றி எழுதுகிறேன்

— காயத்திரி கொன்ஸ்டன்ரைன் —



நான்கு வருடம் சிறைவாசமிருந்த வண. பிதா சிங்கராயர், கைச்சங்கிலி இடப்பட்ட நிலையில் அழைத்துச் செல்லப்படுன்றார்.

ஆண்டு தோறும் வந்து போகும் புதுவருடம் மீண்டும் வந்துவிட்டது. தை என்றதும் மகிழ்ச்சி பிறக்கின்றது. பலருக்கு பரீட்சை முடிந்துவிட்டது, மகிழ்ச்சி தோன்றுகிறது, எதிர்பார்ப்பு பிறக்கின்றது. ஆனால் கடந்த பல வருடமாக எமது தாய் நாட்டில் புது வருடம், இவ்வளவு குதூகலத்துடனும், எதிர்பார்ப்புடனும் பிறக்கவில்லை. ஸ்ரீ லங்கா இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல்கள், ஆகாயப்படையினரின் பொம்மர்கள், கிழக்கு



*மட்டுநகரில் கொலை செய்யப்பட்ட வண.பிதா சவரிமுத்து செல்வராஜா. வயது 32*

மாகாணத்தில் தொடரும் கொலைகள், பெண்கள் மீதான பலாத்காரம், துரோகி என்ற குற்றச்சாட்டின் பேரில் நெற்றிவெடிகள், சிறு முதலாளிமார்களின் கடத்தல்கள் என அநியாயங்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

கடந்த ஒன்றரை வருடமாக வடக்கு மாகாணத்துக்கு மின்சாரம் இல்லை. அத்துடன் மண்ணெண்ணை ஒரு போத்தலின் விலை 350 ரூபா.!!. அட்டூழியம் என்றதும் இந்தியாவை அண்ணாந்து பார்த்த தமிழ் மக்கள் இன்று குழம்பிப் போய் உள்ளனர். நடந்து முடிகின்ற இவ்வருடம் இருண்ட ஈழமக்களின் வாழ்வில் நடந்த அமாவாசை. எமது எதிர்காலம் இருண்டு கொண்டே வருகிறது. தேசிய விடுதலாப் போராட்டம் என்றால் இவ்வாறான கஸ்டங்கள் அனைத்தும் சகஜம் தான் என்றொரு வாதமும் உண்டு. ஆனால், இவ்வருடத்தில் தமிழ் பேசும் மக்கள், இலங்கையிலும் இந்தியாவிலும் சந்தித்த கஸ்டங்கள் அவசியமானதா? எமது தேசத்தின் சுயநிர்ணய உரிமைக்கான விடுதலைப் போராட்டம் அயல் நாட்டின் பாதுகாப்பிற்கும், சுபீட்சத்துக்கும் ஏன் இடையூறாக இருக்க வேண்டும்? நாம் ஏன் போராட ஆயத்தம் ஆனோம்? எமது நண்பர்கள் யார்? எமது பகைவர்கள் யார்? ஒரு வரைவிலக்கணம் இல்லாத போராட்டம் எம்மையே குழப்புகின்றது. ஏற்கனவே சாக்கடையாக இருந்த போராட்டத்தை மேலும் அசிங்கப்படுத்தி விட்டோமோ என்று கூட எண்ணத்தோன்றுகிறது. பேச்சுவார்த்தை என்ற சொல் தற்போது ஈழ மக்களுக்கு பகிடியாகத் தெரிகின்றது. தை மாதத்தில் ஆரம்பமாகும் பேச்சுவார்த்தை புதிதாக மேடையேறும் பழைய நாடகம்

செய்திகளை பத்திரிகைகள் ஏனோ தானோ என்ற மனோபாவத்துடனேயே பிரசுரிக்கின்றன.

கிறிஸ்துவின் பிறப்பு எமது ஈழபூமிக்கு இம்முறையும் ஒளியைக் கொண்டுவரத் தவறிவிட்டது. மதத் தலைவர்களினதும், அரசியல்வாதிகளினதும் திருநாள் நற்செய்திகளில் உள்ள நாணயமும் நம்பிக்கையும் நடைமுறையில் இல்லை. தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற பழைய கதையை மீட்கிறார் தொண்டமான். வடக்கு கிழக்கு மக்களுக்கு வழி பிறக்குமோ இல்லையோ ஆனால் அடி கிடைப்பது நிச்சயம். புத்தாண்டு புத்துணர்வையும், புரிந்துணர்வையும் கொடுக்கும் என்கிறார் பிரேமதாஸ. அவருக்கு நகைச்சுவை உணர்வு கூடிக் கொண்டே வருகிறது. அரசியல் வாதிகளை ஒரு புறம் விட்டுவிடுங்கள். மதத் தலைவர்களின் செயற்பாடுகளில் கூட நிதானமான வழிகாட்டல்கள் இல்லை. மதத் தலைவர்கள் எனும் போது நாம் பௌத்த தலைமைப் பீடத்தைக் கணக்கில் எடுக்க முடியாது. அவை அன்றும் என்றும் சிங்களப் பாஸிசவாதிகளின் ஊது குழல்கள். இனத்துவேசம் அவர்களின் உயிர் மூச்சு. இன்றைய தேசிய பிரச்சனைக்கு ஈழமக்கள் இல்லாத ஒரு தீர்வையே அது முன் வைக்கின்றது. பேச்சுவார்த்தை என்று கூறுமுன்னரே நாகதீபம் விகாரை, யாழ்

> "அட்டூளியம் என்றதும் இந்தியாவை அண்ணாந்து பார்த்த மக்கள் இன்று குழம்பிப் போய் உள்ளனர்"

விகாரை மீண்டும் புனரமைக்கப்படல் வேண்டும், வட கிழக்கு மாகாணங்களில் சிங்களவர்கள் குடியமர்த்தப்படல் வேண்டும் என்று கூச்சல் போடுகின்றனர். ஆடு அறுக்க முன் எதையோ கேட்ட கதை போல் இருக்கிறது . இவர்களின் பேச்சு.

ஈழ மக்களின் பிரச்சனையைப் பொறுத்தவரை, கொழும்பு கிறிஸ்தவ தலைமைப்பீடங்கள் மட்டும் ஏதோ பெரிதாக வெட்டி வீழ்த்தவில்லை. இன்று போராட்டம் உச்சத்தை அடைந்திருக்கும் வேளையில் பல கிறிஸ்தவ குருமார்கள் அநாவசியமாகக் கொலை செய்யப்பட்டு விட்டனர். இவற்றைப் பற்றி கொழும்புத் தலைமைப்பீடங்கள் அக்கறை எடுத்ததாகத் தெரியவில்லை. இவர்களின் சேவையையும் தியாகங்களையும் பண்டிகைக் காலங்களில் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளோம். வண, பிதா. மேரி பஸ்ரியன் வண. ஜோர்ஜ் ஜெயராஜசிங்கம் ஆகியோரின் படுகொலைகளை மறந்து நாம் பல நாள் ஆயிற்று. அதற்குப் பின் கூட வண. பிதா பர்ணாந்து, வண.பிதா சவரி

பிதா ஜோன் கோர்பற் என பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது. இவ்வாறான கொலைகள் ஒருபுறமிருக்க, தமிழ் மதகுருமார் மீதான கொடுமைகள் பரவலாக நடைபெறுகின்றன. எல்லாவற்றிற்கும் மகுடம் சூட்டுவது போல் யாழ் மறைமாவட்ட ஆயர் அதி வண. பிதா தியோகுப்பிள்ளை ஒரு சந்தர்ப்பத்தில் அயல் நாட்டுப்படைகளினாலும் அவர்களின் சகபாடிகளினாலும் தாக்கப்பட்டார். கிறிஸ்தவர்கள் என மார்தட்டிக் கொள்ளும் பலர் இதைத் தட்டிக் கேட்கவில்லை. அப்படி கேட்பதை அவர்கள் அரசியல் என்று நினைத்து விடுகிறார்கள். இன்று வட கிழக்குப் பகுதியில் நிவாரண வேலைகளை முன்னின்று மிகவும் திறமையான முறையில் நடாத்தி வருபவர்களில் பலர் கிறிஸ்தவக் குருமார்கள் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.




குருநகர் கிராமமொன்றில் இடம் பெற்ற படுகொலை

> "அமைதியை தேடும் அனைவரும் நீதிக்காக போராட கடமைப்பட்டவர்கள்"

இன்றுள்ள நிலைமையில், மத குருமார்களினால் மட்டுமே பல முக்கிய நிவாரணப் பணிகளைச் செய்ய முடியும். இவர்களின் கைகளைப் பலப்படுத்த வேண்டாமா?

வெளிநாடுகளில் செயற்படுகின்ற கிறிஸ்தவ அமைப்புக்கள் அனைத்தும் இதைக் கவனிப்பில் எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழ் பூஜை வைப்பதும், லூர்த்து மாதா கோவிலுக்கு படை எடுப்பதிலும் கிறிஸ்தவ கடமை நிறைவு பெற்றுவிட்டதாக எண்ணிவிடக் கூடாது. சொந்த மண்ணின் துயரில் கலந்து கொள்ள பின் நிற்பவர்களையும், சொந்த நாட்டையும், மக்களையும் மறந்தவர்கள் தங்களை எவ்வாறு கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்ள முடியும். பாப்பரசர் போல் (ஆறாவது) கூறியது போல் அமைதியைத் தேடும் அனைவரும் நீதிக்காக போராடக் கடமைப்பட்டவர்கள். எமது இனத்தைப் பொறுத்த வரை இது இன்றைய அவசிய தேவையும் கூட.

# ஆடு அறுக்க முன்...




## தேவை

ஐரோப்பாவில் மிகவும் பிரமாண்டமான முறையில் தயாரிக்கப்படவுள்ள தொலைக்காட்சித் திரைப்படத்திற்கு கலைஞர்கள் தேவைப்படுகின்றனர்.

நடிக, நடிகைகள் இசையமைப்பாளர்கள், கதைவசனகர்த்தாக்கள், பாடக, பாடகிகள்

மற்றும்

திரைப்படத்துறையுடன் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

தொடர்புகட்கு

**251B Haydons Road**
**London SW19 8TY, U.K**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்பா கம்பீரத்துடன் தலையசைத்து வழியனுப்பினார். படகு கரையை நெருங்கிவிட்டது. முன்னே நின்ற ஒட்டி ஒருவன் ஒரு கம்பை விட்டு கடலின் ஆழத்தை அளந்து திருப்திப்பட்டுக் கொண்டான்.

எஞ்சின் நிறுத்தப்பட்டது.

வண்டி வேகமாக திருப்பப்பட பட்டென்று படகிலிருந்த எல்லோரும் கடலில் குதித்தார்கள் தண்ணீர் இடுப்பு மட்டத்திற்கு சற்றுக் கூடுதலாக இருந்தது.

அப்படியே நடந்து போங்கள். அந்த விளக்கடியில் ஆட்கள் நண்பர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள் .நாங்கள் வருகிறோம்". சேரன் கைகளை படகில் ஊன்றியபடி தலையைக் குனிந்து கடலைப்பார்த்து கூறிக்கொண்டு விடை பெற்றான்.

சங்கர் திரும்பிப் பார்த்தான். இப்பொழுது சேரன் அதே கம்பீரத்தோடு எஞ்சின் அருகில் உட்காந்திருந்தான்.

வேண்டும்.

இதயம் கவலையால் துவண்டது.

'என்னை என்னை மன்னித்துக் கொள்' என்று அவன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

பனி மூட்டங்கள் வானத்து நட்சத்திரங்களை விரட்டி அடித்துவிட்ட மமதையில் மலை முகடுகளைத் தம் இஸ்டம்போல் ஆலிங்கனம் செய்த மயக்கம் தெரியாத பரவசத்தில் அப்படியே வீழ்ந்து உறங்கிக்கொண்டிருந்தன. சந்திரனின் ஒளி மாத்திரம் இந்தக் காட்சிகளைக் கண்டும் காணாதது போல இடையிடையே தெறித்து சிதறியது. புற்தரைகளில் படிந்தபனித்துளிகள் பட்டு அந்தக் களித்தரை சேறாக மாறிக்கொண்டிருந்தது. சவுக்கு மரங்கள் மட்டும் நலுங்காமல், குலுங்காமல் அமைதியாக பனித்துளி பட்டு அழுது வடிந்து கொண்டிருந்தன. பனித்துளிகள் சொட்டு சொட்டாக கீழே விழும் சத்தம் இந்த நிசப்த சப்தமெழுப்பி எல்லோரையும் உசார்படுத்துவதோடு தற்பாதுகாப்பிற்கான முதலாவது தாக்குதலான கிரனேட்டையும் வீசி எறியலாம் என்று அனுமதியும் வழங்கப்பட்டிருந்து.

கால்களில் மாட்டியிருந்த சப்பாத்துக்களுக்கு மேல் சொக்ஸ் உள்ள பகுதியில் நீண்ட புற்களில் படிந்த பனித்துளி அவ்வப்போது பட்டு கால்கள் சில்லிடும் அவன் பற்களை லேசாகக் கெட்டிக் கொண்டு அப்படியே நின்றான்.

இரண்டு மணி நேர கடமையில் அரை மணி நேரந்தான் கழிந்திருக்க வேண்டும்.

அந்த முகாமில் சுமார் நூற்றைம்பது பேர் பயிற்சி பெறுகிறார்கள். வடக்குப் புறம் இருக்கும் சிறிய கொட்டகையுள் முகாம் பொறுப்பாளர், பயிற்றுனர், வைத்தியர் உட்பட முக்கியமானவர்கள் ஆறேழு பேர்வரை தங்குவார்கள். அதற்கு எதிர் புறம் எதிரும் புதிருமாக இருக்கும் நான்கு கொட்டகை

டியும் உண்ண நிர்பத்திக்கும் போதும், ஆரம்பத்தில் அவனுக்கு வேதனையும், வெப்பு சாரமாகவும் இருந் தது.

தோழர்களே! இராணுவத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருப்பதே அதன் கட்டுப்பாடு, ஒழுங்கு, கட்டளைகளுக்கு கீழ்படியும் தன்மை போன்றவைகள் தான். நாம் எம்விடுதலையில் பிரியமுடையவர்களாக இருக்லாம். ஆனால் எமது இராணுவத்தின் வெற்றியை எமது விடுதலை உணர்வு மாத்திரம் தீர்மானிக்கப் போவதில்லை. எமது கட்டுப்பாடான கடுமையான பயிற்சியே அதைத் தீர்மானிக்கப்

மாத்திரம் புதிதாக அவனைப் பற்றிக் கொள்ளும்.

எவ்வளவு வித்தியாசமான பிறப்பு அவன்.

அவனுடைய முதல் சந்திப்பு அவனுக்கு எப்பவும் இன்பக் கிளுகிளுப்பை ஊட்டும். அந்தச் சந்திப்பின் போதிலேயே அவனது ஜீவனுள்ள வாழ்வின் துடிதுடிப்பை அனாயசமாக வெளிப்படுத்திக் காட்டினான் நாதன்.

நாதன் பிறந்து வளர்ந்ததெல்லாம் கொழும்பில்தான். யாழ்ப்பாணத்துப் பெண்ணான அவன் தாயின் உறவென்று யாரையும் நாதன்

போக்கு கசினோதான். அந்தச் சூதாட்டத்தின் மூலமே எல்லாச் சொத்துக்களையும் அழித்து சீரழிக்க முடியும் என்று நிரூபித்துக் காட்டுபவர் போல் வன்மத்துடன் இரவு பூராக பொழுதை அங்கேயே கழிப்பார் அவர்.

வீட்டில் பணம் நகை எல்லாம் படிப்படியாகக் கரைந்து போவதை பொறுக்க மாட்டாத ஆற்றாமையில் நாதனின் அம்மா வெகு காலத்திற்கு முன்பே சண்டை போட்டுவிட்டு இரு பெண்பிள்ளைகளுடன் தனியாக வாழத் தொடங்கி விட்டாள்.

நாதன் அதைப்பற்றிக் கவலையேதுமின்றி எப்பொழுதும் போல் அப்பாவின் செல்லப்பிள்ளையாக அவருடனேயே இருந்தான். சூதாட்டத்தில் எக்கச்சக்கமாக தோல்வி ஏற்பட்டால் அவர் சோர்ந்து போய் வீட்டிற்கு வந்து மது வெறியில் வாய்க்கு வந்த படி தனக்கு தெரிந்த தெய்வங்களையெல்லாம் தூசணை வார்த்தையால் திட்டித் தீர்ப்பார். அப்பொழுது அவர் வேதனை நியாயமென்பதுபோல அவருக்கு ஆறுதலளித்து நாளைய வெற்றிக்கு நம்பிக் கையூட்டி அவரை அமைதிப் படுத்துவான் நாதன்.

அவன் முன்னால் யாரும் கலங்குவதும், அழுவதும் தாங்க முடியாத வேதனையைக் கொடுத்துவிடும்.

எப்பொழுதாவது அவர் சூதாட்டதில் வெற்றிபெற்றுவிட்டால் போதும். மறந்து விடாமல் எங்கிருந்தாலும் இவனைத் தேடிப்பிடித்து அப்படியே இவன் கையில் ஒரு தொகை பணத்தை கொடுத்துவிட்டு மகிழ்ச்சியில் பூரித்து நிற்பார். ஒரு இரவுக்குள் எப்படியாயினும் அதை செலவழித்து விட்டு நாதனும் அலட்சியமாக நிற்பான்.

**"கூட்டுறவு உணர்வை வளர்க்கச் செய்யும் நடைமுறைகளுக்கு மிகச் சிரமப்பட்டே அவன் பழகிக் கொண்டான்"**

போகின்றது. இங்கு உங்கள் சுய கௌரவம், தனித்துவமான செயல்பாடுகளுக்கு எதிராக கூட்டுறவு வளர்ப்பதாகவே இருக்கும்.

இராணுவ பயிற்றுனர் அடிக்கடி இதைக் கூறுவார்.

பயிற்சியின் போது, விடும் தவறுகள் ஒவ்வொன்றிற்கும், தண்டனை வழங்கும் போது 'நீங்கள் விடும் தவறுகள் ஒவ்வொன்றும் மிகவும் பாரதூரமானவை. இவை ஒவ்வொன்றுற்கும் நீங்கள் தண்டனை பெறத் தயாரக இருக்க வேண்டும். இந்த உணர்வு உங்களுக்கு எப்பொழுதும் இருக்க வேண்டும்".

சங்கர் அந்த வாழ்வை இப்பொழுது ஒரு வாறு திக்கு முக்காடி ஜீரணிக்க கற்றுக்க கொண்டான். வெகு விரைவில் பயிற்சி முடிய வேண்டும். மீண்டும் ஊருக்கு சென்று நாதனுடன் பழையபடி புதிய அனுபவங்களுடன் கழக வேலைகளில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்ற ஆர்வத்தில் ஒவ்வொரு நாளையும் உற்சாகத்துடன் வென்று வந்தான்.

நாதன், தான் இல்லாமல் எப்படித் தனியாக வேலைப் பளுவில் மூழ்கித் திழைக்கின்றானோ என்ற கவலை

அறிந்ததில்லை. அவன் தந்தை கொழும்பில் ஒரு பணக்காரரின் பிள்ளை என்று பெருமையாக அடிக்கடி பீற்றிக் கொள்வார்.

றோயல் கல்லூரியில் மாணவ வாழ்வை ஆரம்பித்தவனுக்கு ஒ. எல்லுக்கு அப்பால் போக முடியவில்லை. பதினேட்டு வயது வரை கிரிக்கெட் மட்ச், கிளப்டான்ஸ், பொப்பாடல் என்பதைத் தாண்டி இவனது உலகக்கண்ணோட்டம் செல்ல வாலிபம் விடவில்லை. வீட்டில் அம்மாவும், அப்பாவும் மோசமாகச் சண்டை போடும் நாட்களில் அந்தக் காட்சிகளை பார்க்க மனமில்லாமல் அப்படியே ஏதாவது கிளப்புக்கு சென்று விடுவான்.

அரசாங்க நிறுவனம் ஒன்றில் கொழுத்த சம்பளத்துடன் இலவச சலுகைகள் பலவற்றுடனும் பதவி வகித்த அவன் அப்பாவிற்கு பிடித்தமான பொழுது

தொடரும்

புதியதோர் உலகம் எனும் சிறந்த நாவல் ஈழப் போராட்டத்தில் நடந்த உண்மைச் சம்பவங்களைக் கொண்டதாகும்.




அவன் வார்த்தைகள் கடல் அலைபோல பாய்ந்து வந்து மீண்டும் ஒரு தடவை செவிப்பறையில் முட்டி மோதியது.

கடல் அன்னை என்ன அவ்வளவு மோசமானவளா?

கைகளில் உள்ள பார்சல்களை நனைந்து விடாதபடி தலைக்கு மேல் உயர்த்திப் பிடித்துக் கொண்டு கரையை நோக்கி எல்லோரும் நடந்தார்கள். கரையில் இறங்கியதும் எல்லோரும் உடுப்பை மாற்றிக்கொண்டு அவசரமாகப் புறப்படுங்கள், இங்கு அதிக நேரம் சுணங்கக்கூடாது. என்று இவர்களை இனங்கண்டவர் போல் அங்கு காத்திருந்த ஒருவர் உசார்ப்படுத்தினார். எல்லோரும் அவசரஅவசரமாக தலையைத் துவட்டி சாரத்தை மாற்றிக் கட்டி விட்டு அந்த இடத்தை விட்டு வெளியேறினார்கள்.

வேகமாக நடந்து வந்து சதுப்பு நிலங்கலையும், தாளைப்பற்றைகளையும் தாண்டி தார் வீதிக்கு வந்தார்கள். சங்கர் ஏதோ நினைவுக்கு வந்தவனாக அப்பொழுது கைகளில் இருந்த ஈரக் காற்சட்டை—பையில் கைகளைவிட்டுத் துளாவினான்.

மனம் சோர்வுற்றுத் துணுக்குற்றது.

அந்த ஐம்பொன் வளையலைக் காணவில்லை.

மான அமைதியில் அவனை உசாராக்கிக் கொண்டிருந்தது.

சற்றைக் கொருதடவை தலையைக் குனிந்து நிலத்தில் ஏதும் அசைவு தென்படுகிறதா என்று கவனித்து விட்டு திருப்தியுடன் அப்படியே நின்றான் சங்கர். முகாமின் தெற்குப்புறக் காவலில் அவன் இருப்து நிமிடத்துக்கு ஒரு தடவை ரவுண்ட் டியூட்டியில் வருபவன் அவனைத் தாண்டிச் செல்லும் போது ஒரிரு நிமிடமாவது ஏதாவது பேசிச்செல்லும் வழமைக்கு மாறாக அன்று அவன் 'உம்' என்று மூஞ்சை இழுத்து வைத்து நிற்பது மனத்திற்கு என்னவோபோல் இருந்தது.

றவுண்ட் டியூட்டி போன பின்பு மீண்டும் அவன் வரும்வரை அந்த கும்மிருள் தான் துணை.

கழுத்தில் மாலையாகத் தொங்கிக் கொண்டிருந்த விசிலை சற்றைக் கொரு தடவை இடது கையினால் நெருடிவிட்டுக் கொண்டிருந்தான். வலதுகையில் பற்றிப் பிடித்திருந்த கிளிப் கிறனேட் கையில் பரீட்சயமாகாமல் இன்னும் உறுத்திக்கொண்டிருந்து.

இரண்டு நாட்களுக்கு முன்பு தான் காவலில் நிற்போருக்கு கிறனேட் கொடுக்கப்பட்டது. அதற்கு முன்பு குறுந்தடி மாத்திரம் தான்.

களில் பயிற்சி வீரர்கள் உறங்கிக் கொண்டிருந்தார்கள். அதற்கப்பால் சமயலறை, வாசிகசாலை, சுகயீனக் கொட்டகை எல்லாம். நடுவில் பயிற்சி மைதானம் பரந்து கிடந்தது.

சங்கர் அந்தச் சூழலுக்கு இசைவாக்க தன்னை நன்கு பழக்கப்படுத்திக் கொண்டான். இராணுவப் பயிற்சி அவன் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மிகக் கடுமையானதாகவே இருந்தது. ஜீரணிக்க முடியாத நடைமுறைகள் அவனைத் திக்குமுக்காடச் செய்தன. முதல் நாளே ஒவ்வொருத்தருக்கும் தனித்தனியாக ரணிங்சோட்ஸ், பெனியன், பாய், பெட்சீட், தகரபீங்கான் கோப்பை என்று கொடுத்த போது இனம்புரியாத வேதனை நெஞ்சை ஊடுருவிச் சென்றது.

தான் என்ற அகம்பாவம், தனித்துவம் யாவற்றையும் இல்லாமல் செய்து ஒரு கூட்டுறவு உணர்வை வளர்க்கச் செய்யும் நடைமுறைகளுக்கு மிகச் சிரமப்பட்டே அவன் இசைவாக்கிக் கொண்டான்.

சிறிது நேரத்தில் காலையில் எழுந்து பரக்க,பரக்க காலைக் கடன்களை, முடித்து பயிற்ச்சிக்கு செல்லும் போது, பீங்கானுடன் நீண்ட வரிசையில் உணவுக்குகாக நிற்கும் போது

SAVE £££'s!!!
WHY PAY MORE FOR YOUR OVERSEAS TRAVELS AND VACATIONS WHILE
WINGS TRAVEL
COULD GIVE YOU THE BEST VALUE FOR YOUR MONEY!!!
ALL CHEAPEST AND COMFORTABLE AIR FARES TO:
SRI LANKA, INDIA, U.S.A., AUSTRALIA AFRICA, CANADA AND MANY MORE DESTINATIONS OF YOUR CHOICE
Call us for your travel requirements
(Tickets, Passports, Visas, Insurance, etc.)
081-520 6832
081-503 3891
120 Palmerston Road, Walthamstow, London E17

www.tamilarangam.net






# மார்க்கு, ஒரு ஓவியக்கலைஞன்

## ஓவியர் மார்க்கு

கலை என்பது ஒரு மனிதனை வியக்க வைத்து சிந்திக்கத்தூண்டும் ஒரு அற்புதத் துறை. எவர் வேண்டுமானாலும் கலையை ரசிக்கக் கூடியவராக மாறலாம். ஆனால் கலையைப் படைக்கக் கூடியவராக மாறமுடியாது. எமது இனம் என்று தோன்றியதோ அன்றே கலையும் எங்களுடன் கூடப்பிறந்திருக்க வேண்டும். இலக்கியம், சிற்பம், பரத நாட்டியம் என்று மனிதனுடைய வளர்ச்சிக் கட்டங்களின் ஒவ்வொரு பகுதியுடனும் ஒன்று கலந்தது கலை. எங்கள் பாரம்பரியம் மற்றைய எல்லாப் பாரம்பரியங்களிலும் இருந்து வேறுபடுவதற்குக் காரணமே எங்களுடன் ஒட்டி உறவாடிய கலைகள் தான். சிற்பம், பரதநாட்டியம் என்று எம்மவரால் போற்றிப் பின்பற்றப்பட்ட கலைகள் இன்றும் உயிர்த்து நிற்கும் போது, கலையின் ஒவ்வொரு நரம்பையும் மீட்டிப் பார்க்கும் எங்களினம் ஓவியக்கலையை ஆதரிக்க மறந்ததேன். ஓவியம் என்பதும் ஒரு வித, சிந்தனையைத் தூண்டி மனிதனை தன்வசப்படுத்தக் கூடிய கலைதான். சிரிப்பவனை அழவைக்கவும், அழுபவனைச் சிரிக்கவைக்கவும் ஒரு ஓவியனால் தான் முடியும். எத்தனை புகைப்படங்களை பார்த்தாலும் ஒருகையால் வரைந்த ஓவியத்தைப் பார்க்கும் போது ஏற்படுகின்ற பூரிப்பு புகைப்படங்களில் ஏற்படுவதில்லையே!. இப்படிப்பட்ட அழகு மிகு கலையை எம்மத்தியில் இருந்து மறைய விடக்கூடாது.



தாய்மை

சீனா, ஜப்பானிலும், மேற்குலக நாடுகளிலும் ஓவியங்களுக்கு கிடைக்கும் வரவேற்பில் ஒரு வீதம் கூட எங்கள் கலைஞர்களுக்குக் கிடைப்பதில்லை. ஒரு ஓவியனுக்கு வேண்டியவை பணமுடிச்சல்ல. அவன் ஆத்மாவைத் திருப்திப்படுத்தும் ஆதரவு.



ஜூலை 83


இந்த ஆதரவு அற்ற நிலையிலும் ஈழத்தில் ஓவியங்களைப் படைத்த, படைத்து வரும் கலைஞர்களை தட்டிக் கொடுத்து வரவேற்கவேண்டியது ஈழ மக்களாகிய எங்களுடைய கடமையாகும்.

இந்த வகையில் வரவேற்புக்குரிய கலைஞன் திரு. மார்க்கு என்பவரை உங்களுக்கு அடையாளம் காட்டவேண்டியது அவசியம். குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஓவிய ஆசிரியராகக் கடமை புரிந்தவர். இன்றும் எங்களில் பலருக்கு அறிமுகமாகாத இந்த ஓவியன் படைத்த ஓவியங்கள் கடதாசியில் இருந்தாலும் பேசும் வல்லமை கொண்டவை.

எடுத்துக் கொண்ட கருவை நளினமாகவும் அதே வேளை துல்லியமாகவும் படைக்கும் திறன் கொண்ட இந்தக் கலைஞனின் படைப்புக்கள் காலத்தால் அழிக்கப்பட முடியாதவை.

ஜூலை 83, சத்தியத்துக்காக, தாய்மை போன்ற ஓவியங்கள் ஆயிரம் ஆயிரம் வார்த்தைகளால் விளக்க முனைந்தாலும் முடியாத விடயங்களை தன் கைத்திறனால் வெளிக்கொணர்ந்த இதயம் கவர்ந்த கலைஞன் இவர்.

அவர் இன்னும் பல ஓவியங்களை எங்கள் தாய் மண்ணிற்கு வழங்க எங்கள் ஒத்துழைப்பை வழங்குவது அவசியமாகும்.



சத்தியத்துக்காக

# செய்திச் சுருக்கம்

வடமாகாணம்

இப்பகுதிகளில் இப்போது மண்ணெண்ணையின் விலை வெகுவாக குறைந்துள்ளது. வவுனியா தாண்டிக்குளம் பாதை திறந்து விடப்பட்டதைத் தொடர்ந்து, மண்ணெண்ணை வடபகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டதே இந்த பாரிய விலை இறக்கத்திற்கு காரணமாகும். முன்னர் 150 ரூபாக்கள் விற்ற மண்ணெண்ணை இப்பொழுது 65 ரூபாய் மட்டுமே விற்கப்படுகிறது.

மருந்துத் தட்டுப்பாடு

வடபகுதியில் பல இடங்களில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது.முக்கியமாக யாழ் குடாநாட்டில் பாரிய மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனை நிவர்த்தி செய்ய செஞ்சிலுவைச் சங்கம் உரிய முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம்

இங்கு சில இடங்களில் விமானப் படைகளின் குண்டு வீச்சுக்கள் இடம் பெற்றுக் கொண்டு இருக்கின்றன. விடுதலைப் புலிகளின் சிறு சிறு தாக்குதல்களை அடுத்து மேற்கொள்ளப்படும் இத்தாக்குதல்களின் நிமித்தம் ஏற்பட்ட சேதம் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை.

வவுனியா

வவுனியா வடக்கு

வவுனியாவின் வடக்குப் பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர ஸ்ரீலங்காப் படைகளின் முன் முயற்சியான இந்த நடவடிக்கையினால் இந்தப் பகுதி மக்களின் வழமையான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத் தீவு

முல்லைத் தீவு முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினால் அதனை அண்டியுள்ள பிரதேசங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இது தவிர வேறு சில இடங்களில் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

22.12.91

யாழ்ப்பாணம்.

யாழ் மத்தி

யாழ் மாவட்டத்தில் இன்று அரச படைகள் பாரிய அளவில் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்தின. சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்ற இத்தாக்குதல்கள் என்றுமில்லாதவாறு உக்கிரமாக இருந்ததாக கொழும்பு வரும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

உடுப்பிட்டி

இன்று நடந்த தாக்குதலில் இப்பகுதியைச் சேர்ந்த 68 வயது நிரம்பிய க.இராசதுரை என்பவர் கொல்லப்பட்டுள்ளார்.

அச்சுவேலி

இந்தப் பகுதியில் இன்று நடைபெற்ற கண்மூடித்தனமான தாக்குதலினால் நான்கு வயோதிபர்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஊர்ஜிதமற்ற செய்தி ஒன்று கூறுகின்றது.

வவுனியா

தாண்டிக்குளம்

தாண்டிக்குளத்தினூடாக செல்லும் பாதை இவ்வளவு காலமும் மூடப்பட்டு இருந்தது தெரிந்ததே. இந்தப் பாதை திறந்து விடப்பட்டு கொழும்பிலிருந்து பயணிகள் யாழ் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து பெருமளவு மக்கள் கொழும்பு செல்ல இங்கு வருவதாக அறியக்கிடக்கிறது.

மட்டக்களப்பு

இங்கு பெய்து கொண்டிருந்த அடை மழை தற்போது ஓரளவு ஓய்ந்துள்ளது. இருப்பினும், வெள்ளத்தின் நிமித்தம் அகதிகளாக்கப்பட்ட 50000 இற்கும் மேற்பட்ட மக்கள்

23.12.91

மன்னார்

மன்னார் மாவட்டத்தின் நகரப்பகுதிகளில் இடம்பெற்ற இராணுவத் தாக்குதல் ஒன்றின் போது இருவர் காயப்பட்டுள்ளதாகஅங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

யாழ்ப்பாணம்

இன்று அரச படைகளின் ஆகாயத் தாக்குதல்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. புலிகள் தரப்பில் யுத்தநிறுத்தம் ஏற்கெனவே அறிவித்திருந்தது தெரிந்ததே. இது இவ்விதமிருக்க இங்கு தற்போது பொருட்களின் விலை நாளுக்கு நாள் வெகுவாக குறைந்து வருகிறது. மா, சீனி, தேங்காய் எண்ணை போன்றவற்றின் விலை கணிசமான அளவு குறைந்துள்ளதாக வவுனியா செல்லும் பய

24.12.91

வவுனியா.

வவுனியா வடக்கு

இங்கு மேற்கொள்ளப்பட்ட ஊரடங்கு உத்தரவு இன்னும் தளர்த்தப்படவில்லை. இப்பகுதியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கும் இராணுவத்திற்கு ஒத்தாசையாக விமானப் படைகள் குண்டுவீச்சுக்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது. வீடுகள் கடைகள், பொது ஸ்தாபனங்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான சொத்துக்கள் இந்தக் குண்டு வீச்சின் காரணமாக அழிக்கப்பட்டுள்ளது.

மன்னார் வீதி

இப்பகுதிகளிலிருந்தும் மன்னார் மாவட்டத்திலிருந்தும் புலிகளினால் பலவந்தமாக விரட்டப்பட்ட முஸ்லிம் தமிழ் பேசும் மக்களை மீண்டும் இப்பகுதிகளில் குடியமர்த்த ஆவன செய்வதாக அரசாங்கம் உறுதியளித்துள்ளது. சிங்களப் பகுதிகளுக்கு விரட்டப்பட்ட இந்த மக்கள் மீண்டும் அவர்களது சொந்தப் பிரதேசங்களுக்கு செல்ல வசதிகளை மேற்கொள்ள வேண்டும் என்று முஸ்லிம் குழுவினர் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்த உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத் தீவு

கொக்குத்தொடுவாய்

வீடியோ ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!

ஒவ்வொரு வாரமும் எல்லா வீடியோ நிலையங்களிலும் கிடைக்கும்

கலையமுதம்

வாராந்த வீடியோ இதழ்

தென்னிந்திய சினிமாப் படங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்த பாடல்கள், சிறந்த கதைகள், நகைச்சுவைகள், என்பனவற்றுடன் இலங்கை கலைஞர்களின் ஆக்கங்கள் மற்றும் பல விடயங்களுடன் வாரந்தோறும் வெளிவருகிறது கலையமுதம்.

An Expo Production for all Video Centres in Europe

For further details:
Expo Videographics
Tel: 081-672 6629
081-672 2676
0836 537621

2nd Floor,
118 Tooting High Street
Tooting
London SW17 0RR

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அகிம்சையிலிருந்து ஆயுதம் வரை

முன்னைய இதழ் தொடர்ச்சி

இராணுவ மார்க்கமே சரி என்று கூறிக்கொண்டு போராட்டத்தை முன்னெடுத்த இயக்கங்களில் ஒன்றான ரெலோ பற்றி இனி ஆராயலாம். ஆரம்ப காலகட்டத்தில் இருந்தே விடுதலைப் புலிகளுக்கு சரிநிகராக இராணுவத்தின் மீதான தாக்குதல்களை மேற்கொண்டு வந்த இந்த அமைப்பு எங்கள் போராட்டம் பற்றிய ஒரு தலைப்பட்சமான கண்ணோட்டத்தையே கொண்டிருந்தது. சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீதான தாக்குதல் மூலம் தன்னை ஒரு பலம் வாய்ந்த அமைப்பாக காட்டிக் கொண்ட இந்த இயக்கம் கூட மக்கள் மத்தியில் தூக்கியெறியப் படக் காரணமான செயல்கள் என்ன என்பதையும் ஆராய வேண்டும்.

இந்த இயக்கத்தில் இருந்த அங்கத்தவர்கள் சிலர் தன்னிச்சையாகச் செயற்பட்டமையும், கொலை, கொள்ளை போன்ற சமுதாய விரோதச் செயல்களில் ஈடுபட்டமையும் இதனைச் சாட்டாக வைத்துக் கொண்டு சக இயக்கங்கள் வீடுகளில் கொள்ளையடித்துவிட்டு ரெலோதான் கொள்ளையடித்தது என்று கதை கட்டிவிட்டமையும் இந்த இயக்கம் தொடர்பான நல்லெண்ணத்தை மக்கள் மத்தியில் இருந்து அப்புறப்படுத்தத் தொடங்கியது.

இதனை அடுத்து நடைபெற்ற பொபி தாஸ் மோதல்களும் ஆஸ்பத்திரி என்று கூடப்பார்க்காது நோயாளிகளின் மத்தியில் மாறி மாறி சுட்டமையும் இவர்கள் மீதான வெறுப்பை மக்கள் மத்தியில் அதிகரிக்கச் செய்தது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி விடுதலைப் புலிகள் நடாத்திய ஈவிரக்க மற்ற தாக்குதல்களும் அதன் நிமித்தம் கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கான அப்பாவித்தோழர்களும் இந்த அமைப்பு இனி மேல் காலங்களில் ஒரு பலம் பொருந்திய அமைப்பாக இருக்க முடியாத நிலையைத் தோற்றுவித்தது.

இறுதியாக ஆராயப்பட வேண்டியது விடுதலைப் புலிகள் அமைப்பு ஆகும். ஈழ விடுதலை வரலாற்றில் மட்டுமல்ல உலக வரலாற்றிலேயே மிகவும் சிறந்த கெரில்லா இயக்கமாகத் திகழும் இந்த அமைப்பு இராணுவ மார்க்கமே தமிழீழத்தை வென்று தரும் வழி என்று முற்றுமுழுதாக நம்புகிறது. தலைவரிடம் மாத்திரமே அதிகாரத்தைக் கொண்டிருக்கும் இந்த அமைப்பு கட்டுப்பாட்டுடன் வளர்ந்த ஒன்றாகும்.

ஈழ விடுதலை வரலாற்றிலே முதன் முதலில் மாற்று இயக்க உறுப்பினர் ஒருவரைக் கொலை செய்த இந்த இயக்கமே இயக்க மோதலுக்கு அத்திபாரம் இட்ட அமைப்பாகும். தனி ஒரு இயக்கம் மட்டுமே இருக்கவேண்டும் என்ற கொள்கையுடைய இந்த அமைப்பு பல இயக்கங்களினதும், இயக்க உறுப்பினர்களின் சாவுக்கும் காரணியாக இருக்கின்றது.

கொண்ட கொள்கையில் இன்று வரை உறுதியாக உள்ள இந்த இயக்கம் ஜனநாயக மறுப்புத் தன்மை கொண்டது. மக்களை கடத்துதல், பணம், நகை கேட்டு பெண்களைகூட பயணக் கைதிகளாகப் பிடித்து வைத்தல், குறிப்பிட்ட காலத்துக்குள் அவர்களது கேள்வியை சந்திக்க தவறியவர்கட்கு மரணதண்டனை விதித்தல், வரி, பாஸ் முறை போன்றவற்றை பிரயோகித்து மக்களை துன்புறுத்துதல், துரோகிகள் என்று கூறி சக இயக்கங்களின் உறுப்பினர்கள், உறுப்பினர்களின் உறவினர்களை கொலைசெய்தல் அல்லது பிடித்து காலவரையின்றி சிறையில் அடைத்து வைத்தல் போன்ற ஜனநாயக விரோத செயல்கள் இந்த இயக்கம் கூட ஈழ மக்களின் சுய நிர்ணய உரிமையை மீட்டுத்தரும் ஒரு அமைப்பாக இருக்க முடியாது என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் உண்டு பண்ணிக்கொண்டிருக்கிறது.

> "மக்களின் கருத்திற்களுக்கு மதிப்பளித்து தமிழீழத்திற்கான போராட்டத்தை முன்னெடுக்க சிதறிப்போன நல்ல சக்திகள் ஒன்று கூட வேண்டியது அவசியம்"

பாலன்

இருப்பினும் இன்றைய நிலையில் தமிழ்மக்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்கக் கூடிய ஒரு அமைப்பாக இருப்பதனால் இந்த அமைப்பை ஆதரிக் கவேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் மக்கள் .

அகிம்சையிலிருந்து ஆயுதம்வரை படிமுறையில் முன்னேறிச் சென்ற நாம், எங்களுக்குள்ளேயே சண்டையிட்டு அளித்த உயிர்களே ஏராளம் என்று கூறலாம். புலிகள் ரெலோவைச் சுடுவதும், ரெலோ புலிகளைச் சுடுவதும் புளட் தனக்குள்ளேயே சுட்டுக் கொள்வதும் என்று மாறிமாறி சுட்டுக் கொண்ட நாம் ஒரு போதும் ஒற்றுமை பற்றிச் சிந்தித்தது கிடையாது.

ஆயுதங்களைத் தோழிலே போட்டவுடனே கதாநாயகன் என்று எண்ணியதும் கண்ட இடத்திலே கேட்பாரற்றுச் சுட்டுப் பொசுக்கியதும் நாம் இதுவரை படைத்துவிட்ட வரலாறுகள்.

இங்கே ஒருவர் தான் நல்லவர் என்றும் மற்றவர் கெட்டவர் என்றும் கூறிக் கொள்ளும் தகமையற்றவர்கள். அகிம்சை ஏன் ஒத்து வராது என்று எண்ணி நாம் ஆயுதம் ஏந்தினோமோ அதை மறந்துவிட்டு செய்த செயல்கள் இனி ஆயுதம் சரிவராது பழைய நிலையே போதும் என்று சிந்திக்கும் நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. அதிகாரத்தையும் பதவியையும் மறந்து மக்களையும் மண்ணையும் நேசிக்கும் போராளிகளாக நாம் எப்போது மாறுகிறோமோ அன்று தான் ஆயுதம் வரை நாம் சென்றதன் பலன் எமக்குக் கிடைக்கும்.

இந்த அகிம்சையிலிருந்து ஆயுதம் வரை என்ற கட்டுரைத் தொடரை முடிவுக்கு கொண்டுவர முன் ஒரு விடயத்தை நாம் எல்லோரும் மனதில் இருத்திக் கொள்வது அவசியமாகிறது. காலத்திற்கு காலம் இயக்கங்கள் தோன்றுவதும் மனித அழிப்பு நடவடிக்கைகளிலும் சமுதாய, ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபடுவதுமாக மாறிப் போன இயக்கங்களில் மக்கள் பூரணமாக நம்பிக்கை இழந்துள்ளார்கள். ஆயிரக்கணக்கான உயிர்களை பலி கொடுத்து விட்டு இலட்சக் கணக்கான சொத்துக்களை நாசகாரப்படுத்தி விட்டு பல்லாயிரக்கணக்கான மக்களை அகதிகளாக உலகநாடுகள் எங்கும் சின்னா பின்னமாக சிதறிப்போக விட்டு விட்டு மாநிலசுயாட்சி, மாகாண ஆட்சி, பிச்சை போடுங்கள் என்று நாம் பயங்கரவாத அரசை கேட்பது பாம்பிடம் தவளை ஆடைக்கலம் கேட்பது போல் தோன்றாதா? அப்படியானால் ஈழ மக்களின் விடிவுக்கு ஒரு மாற்று வழி இருந்தே தான் ஆக வேண்டும். கடந்த கால வரலாறுகளை கணக்கில் கொண்டு நிகழ் கால நிலைமைகளை கணிப்பிட்டு மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து தமிழீழத்துக்கான போராட்டத்தை முன்னெடுக்க சிதறிப்போன நல்ல சக்திகள் இன்றய கால கட்டத்தில் ஒன்று சேர வேண்டியது காலத்தின் கட்டாய சூழ்நிலையாகி விட்டது. எனவே ஆயுதம் வரை சென்ற நாம் நிராயுத பாணிகளாக பாசிச அரசிடம் சரணடைவதை விட மீண்டும் ஒரு முறை சிந்திக்க வேண்டியது அவசியமல்லவா! ● முற்றும்.

# மக்களின் நலன்களை பாதிக்கும் புலிகளின் நடவடிக்கைகள்

விடுதலைப்புலிகள் இயக்கம் மக்களைத் துன்புறுத்துவதை நிறுத்த வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றுவதை தமது நடவடிக்கைகளில் இருந்து நிறுத்த வேண்டும். அதுமாத்திரமின்றி, தமிழ் மக்களை வடபகுதியை விட்டு வெளியேறுவதற்கும், அல்லது வடபகுதிக்கு திரும்புவதற்கும் புலிகள் அமுலில் வைத்திருக்கும் பாஸ் முறையை நீக்கி அவர்களை சோதனை இடுவதை நிறுத்த வேண்டும் என்று அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது அமெரிக்காவிலுள்ள அகதிகளுக்கான நிறுவனம் ஒன்று.

யு.எஸ்.சி.ஆர். என்கின்ற இந்த நிறுவனம் வெளியிட்டிருக்கும் நாற்பது பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டிருப்பதாவது, அரசாங்கம் மேற்கொண்டு வரும் தமிழ் மக்கள் மீதான நடவடிக்கைகள் கண்டிக்கப்பட வேண்டியவை. அகதிகள் தொடர்பாக இலங்கை அரசு காட்டும் அக்கறை இந்த அரசின் ஆக்கிரமிப்புத் தன்மையைக் காட்டுகின்றது. இது இவ்விதமிருக்க, வடக்கு, கிழக்கு மக்களை புலிகளின் கைகளில் விட்டுவிடுவது என்பதை நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. அங்கிருந்து கிடைக்கும் தகவல்களை வைத்துக் கொண்டு பார்க்கின்ற போது, புலிகளின் மனித இன மீறல்கள் வெளிப்படையாகத் தெரிகின்றன. எனவே மக்களைக் காப்பாற்ற உரிய நடவடிக் வேண்டிது அவசியம்.

இந்த அறிக்கையில் இலங்கை தமிழ் அகதிகள் தொடர்பாக அமெரிக்காவின் நிலை பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதாவது, பெருந்தொகையான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்குரிய காரணங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப் பட்டுள்ளது. முதலாவது, தமிழர்கள் இலங்கையை விட்டு வெளியேறுவது பயத்தினால் அல்ல என்றும், அவர்கள் வெளியேறுவதற்கு தனிப்பட்ட காரணங்களே பின்னணியில் உள்ளன. இரண்டாவது, இலங்கைத் தமிழர்கள் அயல்நாடுகளில் அடைக்கலம் தேடிக்கொள்ளும் வாய்ப்பு இருக்கின்றது, மூன்றாவது, ஆயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கைக்குள்ளேயே வாழக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். குறிப்பாக கொழும்புப் பகுதிகளில்.

மேலைத்தேய நாடுகளில் அடைக்கலம் தேடும் தமிழர்கள் தொடர்பாக இவ்வறிக்கை குறிப்பிடும் போது, 12 ஐரோப்பிய கூட்டமைப்பில் உள்ள நாடுகளும் அகதிகள் தொடர்பான சட்டங்களை மாற்றியமைக்க முற்படுகின்றன. இது இந்த நாடுகளில் அடைக்கலம் தேடுகின்ற ஆயிரக்கணக்கான தமிழர்களைப் பாதிக்கும்.

வதனி

ஜேர்மனியில் அடைக்கலம் புகுந்திருக்கும் 50000 தமிழர்களில் ஒரு வீதத்திற்கும் குறைவானவர்களுக்கே அகதிகள் அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது.இவர்களில் பலருக்கு வேலை செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி, தாம் நினைத்தபடி இடம் விட்டு இடம் மாற அனுமதி கிடையாது. இதே சமயம் பிரான்ஸ் நாட்டில் தஞ்சம் கோரியிருக்கும் 6000 விண்ணப்பங்களில் 60 வீதமான விண்ணப்பங்கள் பரிசிலனையின் பின் அகதிகள் அந்தஸ்த்து வழங்கப்படத் தகுதியுடையன என தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை தமிழர்கள் பிரச்சனைக்குத் தீர்வு காண்பது பற்றி ஆராயும் போது குறிப்பிடுவதாவது, ஸ்ரீ லங்கா அரசும், விடுதலைப்புலிகளும் முதலில் யுத்தநிறுத்தம் ஒன்றிற்கு உடன்படவேண்டும். பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின் போது அவுஸ்ரேலியா அறிவித்திருந்ததுபோல, பேச்சு வார்த்தைக்கான தரகராக இந்த நாட்டை ஏற்றுக் கொண்டு சுமுகமான தீர்வுக்கு இரு பகுதிகளும் முன்வர வேண்டும். தமிழர்களின் பிரச்சனைக்கு தீர்வாக அமையும் வண்ணம் சட்டத் திருத்தங்களை இலங்கை அரசு மேற்கொள்ளவேண்டும். அதே வேளை புலிகள் தரப்பிலும் ஜனநாயக விரோதச் செயல்கள் நிறுத்தப்பட்டு ஒரு புரிந்துணர்வுக்கு வர வேண்டியது அவசியம் என்று வலியுறுத்துகின்றது.

# இனப் பிரச்சனைத் தீர்விற்கு வாப்பொல தேரோ எதிர்ப்பு

(நமது நிருபர்)

அண்மையில் பேச்சு வார்த்தைப் படலம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு தொண்டமான் கொண்டு வந்த தீர்வுத் திட்டத்தை வன்மையாகக் கண்டித்துள்ளார் வாப்புல ராகுல என்னும் தேரோ. இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் அக்கறை காட்டிய போதெல்லாம் முட்டுக்கட்டையாக இருந்து வந்த இந்த இனவாதி தேரோ மேலும் குறிப்பிட்டதாவது, தொண்டமானின் தீர்வு மசோதா இலங்கையை அழிவிற்குக் கொண்டு செல்



வாப்பொலதேரோ

லும் ஒரு திட்டமாகும். இந்தத் திட்டத்தை பௌத்த குருமார்கள், சமயவாதிகள் அனைவரும் ஒன்று கூடி எதிர்க்க வேண்டும் என்றார். களனி பல்கலைக்கழக விரிவுரையாளரான இந்த இனவாதி தேரோ பத்திரிகையாளர் மகாநாடொன்றில் குறிப்பிடுகையில், தொண்டமானின். சமாதானத் திட்டமானது தமிழீழத்தைப் பிரித்துக் கொடுப்பதற்கான ஒரு திட்டமே தவிர வேறொன்றுமில்லை என்றார். இந்த திட்டத்தில் ஈழத்திற்கான சகல அத்திபாரங்களும் இடப்பட்டுள்ளது. தமிழீழம் என்ற வார்த்தையைத் தவிர மற்றையபடி சகல தீர்வுகளும் ஈழம் ஒன்றை அமைப்பதற்கான பாலமே என்று இந்த பாஸிச வெறிகொண்ட தேரோ குறிப்பிட்டுள்ளார்.

S.K.Sound Service

50, Renmuir Street
Tooting, London SW17
Tel: 081-767 7129

For Wedding Parties
Disco Events
Birthdays & All other Social Events

7 Days a Week

## வரதா உன் நினைவாக!!

வரதா!

நீ போராட்டத்தின் அவசியத்தைப் புரிந்து கொண்டவன். அதனால் தானோ என்னவோ நீ இருக்கின்ற அமைப்பு எது என்று பார்க்காமல் நீ எடுத்துச் செல்கின்ற போராட்டம் எது என்பதைப் பார்த்தாய்!



முன்னொரு அமைப்பு கலைந்தபோது பின்னொரு அமைப்பிலே இணைந்து உன் தியாகத்தை எங்கள் மண்ணுக்கு வழங்கினாய்!

எதிர்பார்க்காத மரணத்தை தழுவும் வீரர்களிலும் பார்க்க, மரணம் நிகழப்போகின்றது என்பதைத் தெரிந்து கொண்டு சாவை அணைத்துக்கொண்ட உன்னை நினைப்பதற்கு என்மொழியிலே வார்த்தைகள் இல்லை.

நீ சிறையிலே இருந்தபோது சோர்வு பெறவில்லை. விடுதலையாகியபோது ஒடி ஒளியலில்லை. உறவுகளின் பாசத்தின் மடியில் நீ அடிமையாகவில்லை. தொடக்கிய பாதையின் முடிவைக் காணச் சென்று உன் முடிவைத் தேடிக் கொண்டவனே! நீ மறைந்து விட்டாய்! உன்சேவைகள் அல்ல. அழிக்கப்பட்டது உன் உடல் மட்டுமே. உன் லட்சியம் அல்ல.

வரதன் ( அப்புச்சி)

நடராசா வரதராசா

| கரவெட்டியில் | கொட்டகலையில் |
| --- | --- |
| 22-12-1959 | 03-07-1991 |

வரதனே! உன்னை நாம் கிரியைகளில் மட்டும் நினைவு கூரவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால்........ நீ

எங்கள் நினைவுகளில் என்றும் நிறைந்து நிற்பவன்.

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

உன் உறவினர்கள், நண்பர்கள்.

### மட்டக்களப்பில்...

(1ம் பக்க தொடர்ச்சி)

இந்த சுற்றிவளைப்பின் காரணமாக போக்குவரத்து, மற்றும் சிவில் சேவைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வீடுவீடாக நடந்த பரிசோதனையின் பின்னர், மைதானத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் விசாரிக்கப்பட்டனர் என்றும், இந்த விசாரணையின் பின் பல இளைஞர்களை இராணுவம் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்றும் இந்தச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இது இவ்விதமிருக்க, பிந்திக் கிடைத்த தகவல்களின்படி கோயில் குளம் என்ற இடத்தில் வைத்து மூவர் புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். பணத்திற்காகவா இல்லை இயக்க விரோதச் செயல்களில் ஈடுபடதற்காவா இவர்கள் கடத்தப்பட்டார்கள் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

### வன்னிப்பகுதியில்.

(10ம் பக்க தொடர்ச்சி)

போது பாடசாலைகள், வைத்தியசாலைகள், மற்றும் பொது நல ஸ்தாபனங்கள் ஆகிய எல்லாம் பலத்த சேதமடைந்துள்ளன. உயிர்சேதம் பற்றிய விபரங்கள் எமக்குத் தெளிவாகக் கிடைக்கவில்லை.

### ஆறம்ச............

(1ம் பக்க தொடர்ச்சி)

உருவாக்கப்பட வேண்டும்.

இந்த இடைக்கால சபை வடக்குக் கிழக்கில் சுதந்திரமான தேர்தல் ஒன்று நடக்க வேண்டிய பணிகளைச் செய்ய வேண்டும்.

மாகாண சபைக்கு தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள் அதிகாரம் தொடர்பாக அரசுடன் பேச வேண்டும்

போன்ற கோரிக்கைகள் இதனுள் முக்கியமானவையாகும். கையளிக்கப்பட்டிருக்கும் இந்த மகஜர் பலரின் கவனத்தை ஈர்ந்துள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக எந்த வித நடவடிக்கைகளும் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.

## பிலிப்பைன்சில் 11 பேர் பலி

இந்த வருடப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களின் போது பதினொருபேர் கொல்லப்பட்டுள்ளனர். துப்பாக்கி பிரயோகம், பட்டாசு கொழுத்துதல், பயங்கர ஆயுதங்கள் பாவிக்கப்பட்டமையினால் இதுவரை பதினொருபேர் பலியாகியுள்ளனர். 1300 பேர் வரை காயமுற்றுள்ளனர். புது வருடக் கொண்டாட்டங்கள் மட்டுமல்லாமல் நாட்டில் ஏற்பட்டுள்ள பதட்டமான நிலைகளும் இச்சம்பவத்திற்கு வழிகோலி உள்ளன. எப்போதுமில்லாதவாறு மனித சேதத்தைக் கொண்டு வந்திருக்கும் இந்த புதுவருடம் பல உடமைகள் எரிந்து சாம்பலாவதற்கு வழிகோலி

## அன்னைதிரேசாவின் நிலை கவலைக்கிடம்

இந்தியாவில் ஏழை மக்களுடன்பணிபுரிந்த கல்கத்தாவைச் சேரந்த அன்னை திரேசா இன்னும் வைத்தியசாலையிலேயே இருக்கின்றார். அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள ஒரு வைத்தியசாலையில் கவலைக்கிடமான விதத்தில் அனுமதிக்கப்பட்ட இவரது உடல் நிலையில் இன்னமும் மாற்றம் ஏற்படவில்லை என்று இங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

## பம்பாயில் 70 பேர் பலி

இந்தியாவில் பம்பாய் என்னும் இடத்தில் இரண்டு தினங்களுக்கு முன்னர் 70 பேர் பலியாகியுள்ளனர். அரசாங்க அனுமதி பெற்ற மதுக்கடையில் மது அருந்திய இவர்கள் அன்று மாலையே இறந்துள்ளனர். இது பற்றி எமது இந்திய நிருபர் அறிவிப்பதாவது, இந்த மதுக் கடையில், விற்கப்படும் மது பானங்களில் வேறு ஒரு [illegible] ஒன்று கலக்கப்பட்டு விற்கப்படுவதாகவும் இந்த வகை மது பானத்தை அருந்தியவர்களே இவ்வாறு பலியாகியுள்ளனர். இன்னும் 11 பேர் பம்பாய் அரச வைத்தியசாலையில் கவலைக்கிடமான முறையில் உள்ளனர் என்றும் இச் செய்தி மேலும் கூறுகிறது. இந்த மதுக்கடை உரிமையாளர் இப்பகுதி பொலிசாரினால் உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

### மன்னிக்கவும்

1ம் பக்கத்தில் ஆறம் சத்திட்ட செய்தியின் கீழ் உள்ள ஆனந்த சங்கரினால் கொடுக்கப்படுள்ள செய்தியின் தலையங்கம் தவறியுள்ளது. மன்னிக்கவும். இதன் தலைப்பு, 'மூதூரில் மூன்று இளைஞர்கள் பலி.'


### விநியோகஸ்தர்கள் தேவை.

பிரான்ஸ் நாட்டில் ஈழபூமி விற்பனை செய்ய விநியோகஸ்தர்கள் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**The EELABHOOMI**
**164A, (Rear) Mitcham Road**
**London SW17**
**U.K**



**JEYAM ELECTRICAL AND PLUMBING**

■ Plumbing ■ Heating
■ Electrical Work
■ Bathroom Tiling
■ Plastering
M Indoor & Outdoor Decoration

Also 24 hours Emergency work undertaken
For your information call
Jeyam on 081-903 4646


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பத்து மாதக் குழந்தை படுகொலை

(கிளிநொச்சி )

கணேசன் புவனேந்திரன் என்ற பத்துமாதம் நிரம்பிய குழந்தை ஒன்றைக்கடத்திச் சென்ற இனம் தெரியாத நபர்கள் மறு நாள் குழந்தையைக் கொலை செய்துவிட்டு குழந்தையின் பெற்றோரின் வீட்டருகில் போட்டுவிட்டு சென்றுள்ளனர். குழந்தை கடத்திச் செல்லப்பட்ட சமயம் தனது தாயாருடன் ஆழ்ந்த நித்திரையில் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# பிரச்சாரம் வேண்டாம்!

## ஐ.தே.க மத்தியகுழு முடிவு.

இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும் முகமாக முன் வைத்திருக்கும் யோசனைகளை ஐ.தே.க உறுப்பினர்கள் பகிரங்கமாக எதிர்க்கக்கூடாது எனவும், இது பற்றி பிரச்சாரம் செய்யக்கூடாது எனவும் ஐ.தே.க இன் மத்திய குழு தீர்மானித்துள்ளது. இது பற்றி விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தவை வருமாறு, கட்சியிலிருக்கும் எல்லோரிடமும் இருந்து மத்திய குழு இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பது தொடர்பான யோசனைகளை வரவேற்கிறது. மத்திய குழு முடிவு செய்த பின்னர், இதற்கெதிரான பிரச்சாரங்களில் அங்கத்தவர்கள் எந்தக் காரணம் கொண்டும் இறங்கக்கூடாது.

# அன்னமலைப் பகுதியில் இருவர் மரணம்

(மட்டுநகர்)

ஓரிரு தினங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்டத்தில் இரண்டு முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். அன்னமலை என்ற இடத்திற்கு பொருட்கள் வாங்கச் சென்ற இந்த இருவரும் புலிகளினால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று ஊர்சிதம் அற்ற செய்தி ஒன்று குறிப்பிடுகின்றது. அக்பர், ஆதம்பாவா என்ற இந்த இருவரும் படு கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

**Global Printers**

164A, (Rear) Mitcham Road,
Tooting,
London SW17 9NJ.
Tel: 081-767 8895

We Undertake the following work at reasonable rates:

PRINTING - SINGLE AND MULTI COLOUR
TAMIL & ENGLISH

Letter Heads, Business Cards,
Compliment Slips, Invoices.
Wedding Cards, Invitation Cards.
Leaflets, Posters, Tickets.

*Global Printers*

**For prompt service at reasonable rates**
**call us on 081-767 8895**

**OPEN SEVEN DAYS A WEEK**
**FROM 10.00a.m. to 5.00p.m.**

# காலக்கேடு முடிவு................

# தமிழ் பெண்கள் ஐவர் கொலை

(எம்.எஸ்.சலீம்)

கிழக்கு மாகாணத்தில் உள்ள தித்திக்கோடை என்ற இடத்தைச் சேர்ந்த ஐந்து தமிழ்பெண்மணிகள் விடுதலைப்புலிகளினால் கொலை செய்யப்பட்டுள்ளனர். திருமணமான இப்பெண்மணிகளின் கணவர்கள் வியாபாரிகள் என்று கூறப்படுகிறது. ஆளுக்கு ஐந்து லட்சம் ரூபாக்கள் வீதம் கேட்டுக் கைது செய்யப்பட்ட இவர்கள் உரிய நேரத்துக்குள் பணத்தைக் கொடுக்கத் தவறிவிட்டார்கள் என்ற காரணத்தின் நிமித்தமே கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இது இவ்விதமிருக்க, இதற்கு முன்னர் பிடிக்கப்பட்ட 18 வியாபாரிகள் தலா இரண்டு இலட்சம் ரூபாய்கள் வீதம் செலுத்த வேண்டும் என்று கேட்கப்பட்டார்கள். களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த இவர்கள் உரிய தவணைக்குள் பணத்தைக் கொடுத்ததனால் விடுவிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

அண்மைக்காலத்தில் நடந்த அரசபடைகளுக்கும் புலிகளுக்கும் இடையிளான சண்டையில் புலிகளின் கிழக்கு மாகாண தலைவர்கள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறும் இப்பகுதி இராணுவப் பேச்சாளர் ஒருவர், இவர்களுக்கும் இந்த ஆள் கடத்தலுக்கும் சம்பந்தம் இருந்ததாகத் தெரிவித்தார். ஜோய், சத்துருக்கன் என்ற இருவருமே இவ்வண்ணம் கொல்லப்பட்டவர்களாகும்.

இவை ஒரு புறமிருக்க, மண்டூரில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்ட இரண்டு பெண்களும் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்றும், இவர்களின் கதி என்ன என்பது தெரிய வில்லை என்றும் கூறப்படுகிறது.

# இந்தியத் தூதரின் புத்தாண்டுச் செய்தி

(கொழும்பு)

தமிழர்களின் பிரச்சனைக்கு சுமுகமான தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்தியத்தூதுவர் நாகேந்திர நாத்ஜாத் தனது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார். வடக்குக் கிழக்குப் பிரச்சனைக்கு இராணுவ நடவடிக்கை தீர்வாகாது என்று தெரிவித்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர், மேலும் தெரிவிக்கையில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையானது கௌரவமான முறையில் தீர்த்து வைக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்தச் செய்தியில் இவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, நீண்டகாலமாக இருந்து வரும் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டுமாயின், இரு பகுதியினரும் விட்டுக்கொடுத்து ஒரு பரஸ்பர புரிந்துணர்வுக்கு வர வேண்டியது அவசியம் அப்படி இரு பகுதியினரும் பேச்சு வார்த்தைக்கு வந்தாலே இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைக்க முடியும் .

# ஆளும் கட்சிக்கு எதிராக போர்க்கொடி!

(நமது நிருபர்)

பிரேமதாஸவின் அரசுக்கு எதிராக போராடி ஜெயிக்க எதிர்கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து ஒரு புதிய கட்சி ஒன்றை உருவாக்கியுள்ளதாக நம்பகமான செய்திகள் தெரிவிக்கின்றன. ஆறு முக்கிய கட்சிகளின் உறுப்பினர்கள் இணைந்து உருவாக்க விருக்கும் இந்த கட்சி வருகின்ற பொதுத் தேர்தலில் ஒரு கூட்டுக் கட்சியாகப் போட்டியிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வன்னிப் பகுதியில் குண்டுத்தாக்குதல்

(வவுனியா நிருபர்)

வவுனியாவின் வடக்குப் பகுதியிலுள்ள சில கிராமங்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ள ஸ்ரீ லங்கா அரசு முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்கள் மீது பாரிய குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது. வவுனியாவின் வடக்குப்பகுதிகளான நெடுங்கேணி, ஒமந்தை உட்பட பல பகுதிகள் இந்தக் குண்டு வீச்சின் போது பலத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளது. முள்ளியவளை, தண்ணீரூற்றுப் பகுதிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய அளவு பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. இரண்டு மூன்று தினங்களாக தொடர்ந்து நடைபெற்ற இந்தக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இன்றும் சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது வவுனியா நிருபர் செய்தி தெரிவிக்கின்றார். கண்மூடித்தனமாக மேற்கொள்ளும் இந்தத் தாக்குதலின்

(9ம் பக்கம் பார்க்க)

# 42 முஸ்லிம் மக்கள் தடுத்து வைப்பு

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் வடபகுதியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் புத்தளத்துக்கு இடம் பெயர்ந்தமை தெரிந்ததே. இவ்வாறு இடம் பெயரும் வேளையில் புலிகளினால் கைது செய்யப்பட்ட 42 முஸ்லிம் மக்கள் இன்னும் விடுவிக்கப்படாமல் இருப்பதனால், இவர்களைப் பார்வையிடுவதற்கு உரிய வசதிகளைச் செய்து கொடுக்குமாறு இவர்களின் உறவினர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தைக் கேட்டுள்ளனர்.

# துக்ளக் சரித்திரக்கதை நாடகவடிவில்

(காயத்திரி கொன்ஸ்டன்ரைன்)

பிரசித்திபெற்ற 'துக்ளக்' சரித்திரக் கதை தமிழர் அவைக்காற்றுக் கழகத்தின் ஆதரவிலும் திரு.பாலேந்திராவின் நெறியாழ்கையின் கீழ் லண்டனில் மேடையேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே பல மேடை நாடகங்களை இலங்கையிலும் லண்டனிலும் மேடையேற்றியுள்ள பாலேந்திரா, இவ்வாறான பிரமாண்டமான நாடகத்தை வெற்றிகரமாக மேடை ஏற்றுவதற்காக நடிப்புத்துறையில் அனுபவம் உள்ளவர்களினதும், ஆர்வம் உள்ளவர்களினதும் பங்களிப்பை எதிர்பார்க்கிறார். ஆறு மாத பயிற்சித்திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள இந்நாடகத்தின் ஆரம்பத் திட்டங்கள் வருட ஆரம்பத்தில் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய எல்லைக்கு முட்கம்பி வேலி

(தயாமாறன்)

அண்மையில் ராஷஸ்தானில் நடைபெற்ற பொதுக் கூட்ட மொன்றில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் பேசுகையில் இந்திய பாகிஸ்தான் எல்லை முழுவதும் கம்பி வேலியினால் பிரிக்கப்படும் என தெரிவித்துள்ளார். ஏற்கனவே பஞ்சாப் எல்லை முட்கம்பி வேலியால் பிரிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. காஸ்மிரில் தற்போது நடந்துவரும் முஸ்லிம் தீவிரவாதிகளுடன் இந்திய இராணுவம் மோதிவருவதும் இதற்கு பாக்கிஸ்தான் ஆதரவளித்து வருவதும் நாமறிந்ததே. முஸ்லிம் தீவிரவாதிகளுக்கான ஆயுத உதவிகள் தரைமூலம் பாகிஸ்தானிலிருந்து கடத்தப்படுவதை தடுக்கவே இவ்வாறு கம்பி வேலி அமைக்கப் பட உள்ளதாக திரு ராவ் அறிவித்துள்ளார். காஸ்மீர் எல்லையில் ஆரம்பிக்கப் பட உள்ள இவ் வேலி சுமார் 1200 கிலோ மீற்றர் தூரம் வரை விஸ்தரிக்க வேண்டியிருக்கும். இத் திட்டத்தை நிறைவேற்ற சில மாதங்கள் அல்ல பல வருடங்கள் பிடிக்குமென இந்திய அரசு அறிவித்துள்ளது.

# போதகரின் மகனைக் காணவில்லை

(காயத்திரி கொன்ஸ்டன்ரைன்)

உடுவில் கிறிஸ்தவப் போதகரின் மகன் தேவசுதன் விடுதலைப் புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டு இது வரை விடுவிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. அண்மைக் காலங்களில் ஏராளமானவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு இவ்வாறு மறைவான இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மேலும் அறியப்படுகிறது.

# தமிழ் நாட்டில் சர்வகட்சி மகாநாடு

(இந்திய நிருபர்)

பல ஆண்டு காலமாக தீர்க்கப்படாமலே இருந்து வரும் காவிரி நீர்ப்பிரச்சனை பற்றி ஆராயும் பொருட்டு ஒரு சர்வ கட்சி மாநாட்டைக் கூட்டியுள்ளார் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள். இந்த மாநாட்டின் முடிவுகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

# இராணுவ முகாம்கள் விஸ்தரிப்பு

கூழாங்குளம் பகுதிவரை விஸ்தரித்திருக்கும் இராணுவம் மூன்று இராணுவ முகாம்களை இப்பகுதியில் அமைத்துள்ளது. இங்கு அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ முகாமருகே நடாத்தப்பட்ட சோதனைகளின் போது ஆறு பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பற்றிய விபரம் உறவினர்களுக்கு அறிவிக்கப்படவில்லை.

இப்பத்திரிகை ஈழபூமி நிறுவனத்தினரால், குளோபல் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. தொலைபேசி 081 767 8895